# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு2029 ஆனி 15 திங்கட்கிழமை (29-06-1998) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:182


# தேர்தல் பணிகளில் படையினரை ஈடுபடுத்த அனுருத்த கடும் எதிர்ப்பு!

## வடக்கு-கிழக்கு யுத்தம் ஸ்தம்பிக்கும் என்கிறார்

கொழும்பு, ஜூன் 29

தெற்கில் நடைபெற உள்ள மாகாண சபைத் தேர்தல்களில் வடக்கு — கிழக்கில் இருந்து இராணுவத்தினரையும் பொலீஸாரையும் சேவையில் ஈடுபடுத்துவதற்கு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

இதனால் வடக்கு — கிழக்கில் யுத்தமும், சிவில் நிர்வாகமும் ஸ்தம்பிதம் அடையும் என்று அவர் தெரிவித்தார்.

வடக்கு — கிழக்கு யுத்தம் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ள இன்றைய நிலையில் இராணுவத்தினரையும், பொலீஸாரையும் தெற்கே தேர்தல் கடமைகளுக்கு அனுப்புவது புத்திசாலித்தனமான விடயம் அல்ல என்றும் அவர் கூறினார்

ராஜங்கனவில் நேற்று நடந்த வைபவம் ஒன்றில் பேசுகையில் அனுருத்த ரத்வத்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

30 ஆயிரம் பொலீஸாரை தேர்தல் பணியில் ஈடுபடுத்துவதன் மூலம் யுத்தம் ஸ்தம்பிப்பதுடன் வடக்கு-கிழக்கு சிவில் நிர்வாகமும் பாதிக்கப்படும்.

யுத்தத்தில் வெல்வதா? அல்லது தேர்தலை நடத்துவதா? என்று சிந்திக்கும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## சிவபாலன் இன்று பதவி ஏற்பு



யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ், மேயராக தமிழர் விடுதலைக்கூட்டணி சட்டத்துறைச் செயலாளர் பொ. சிவபாலன் இன்று பதவி ஏற்கிறார்.

இன்று பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும் சபையின் மாதாந்தக் கூட்டத்தில் இவர் பதவிப் பிரமாணம் எடுப்பார்.

மாநகரசபைக்கு தமிழர் (10 ஆம் பக்கம் பார்க்க)

## வருட இறுதிக்குள் யுத்தம் முடிவுக்கு வந்து விடுமாம்!

கொழும்பு ஜூன் 29

வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கை இவ்வருட இறுதிக்குள்பெரும்பாலும் பூர்த்தியாகிவிடும்,

இப்படி பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுரத்தரத்வத்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இருந்து வெளிவரும் ''சண்டேரைம்ஸ்'' ஆங்கில வாரப்பத்திரிகைக்கே அவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

தமது நேரடிக்கண்காணிப்பில் நடைபெறும் 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையை முடிவுக்குக் கொண்டுவர அவர் மற்றுமொருகாலக் கெடுவை அரசுக்கு வழங்கியுள்ளார் என்று அப்பத்திரிகை கருத்துத் தெரிவித்துள்ளது. (இ-9)

## உண்ணாவிரதிகளுக்காக மலையகமக்கள் முன்னணி போராட்டத்தில் குதிக்கும்

கொழும்பு, ஜூன் 29

களுத்துறைச் சிறைச்சாலையில் மேற்கொள்ளப்படும் உண்ணாவிரதத்தை 10 நாள்களில் முடிக்க அரசு முனையாவிட்டால், வெகுஜனப் போராட்டம் ஒன்றை நடத்துவதென்று மலையக மக்கள் முன்னணி முடிவு செய்துள்ளது,

மலையகத்தில் இருந்து கைது செய்யப்பட்டு விசாரணை இன்றி ஒரு வருடத்துக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ள பலரும் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளதால், மலையகமக்கள் முன்னணிஇந்தப் போராட்டத்தில் இறங்க வேண்டியுள்ளதாக அந்த முன்னணிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (இ-1-3)

## உண்ணாவிரதத்தை கைவிடுமாறு கோரிக்கை

களுத்துறைச் சிறைச்சாலையில் மேற்கொண்டுள்ள உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு சிரேஷ்ட அரச சட்டத்தரணி சுகத் கமலத் உண்ணாவிரதிகளைக் கேட்டுள்ளார்.

உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளவர்களின் விடுதலை தொடர்பாக ஆராய அவர்களின் வழக்கு ஆவணங்களுடன் இன்று அங்கு விஜயம் செய்வதாகவும் —

ஆகவேஉண்ணாவிரதத்தை கைவிடுமாறும் — அவர் நேற்று உண்ணாவிரதிகளுக்குத் தகவல் அனுப்பியிருந்தார்.

ஆனால் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள 57 பேரும் நேற்று மாலை வரை உண்ணாவிரதத்தை கைவிடவில்லை என்று செய்திகள் தெரிவித்தன. (இ-1-3-21)

## குண்டு வெடிப்பில் சிப்பாய் காயம்

### ஆவரங்காலில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

ஆவரங்கால் படைமுகாம் பகுதியில் விடுதலைப் புலிகளால் வைக்கப்பட்ட குண்டு ஒன்று நேற்று முன்தினம் காலை 11 மணிக்கு வெடித்ததில் படைச்சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார்.

ஆவரங்கால் பகுதியில் உள்ள படைமுகாம் பகுதியில் உள்ள மலசல கூடம் ஒன்றில் குண்டு ஒன்று வைக்கப்பட்டதாகவும் — அந்த மலசல கூடத்தை துப்புரவு செய்ய சிப்பாய் ஒருவர் சென்றதாகவும் —

அச்சமயம் அந்தக் குண்டு வெடித்ததில் அவர் படுகாயம் அடைந்தார் என்றும் — பலாலி இராணுவத் தலைமையகச் செய்திக்குறிப்புத் தெரிவித்தது. (இ-3)

### அச்சந்திரோனி



தெற்கில் மாகாணசபைத் தேர்தல் நடக்க இருப்பதால் போராட்டங்களுக்கு இனிப் பஞ்சம் இருக்காது பாருங்கோ......!

## பாரிய 7 ஜெனரேட்டர்கள் அடுத்தவாரம் வரும்

### கப்பலில் ஏற்றப்படுகின்றன

யாழ்ப்பாணம், ஜூன் 29

காங்கேசன்துறையில் அமைக்கப்படும் மின் நிலையத்துக்குத் தேவையான பாரிய ஏழு ஜெனரேட்டர்களும் அடுத்த வாரம் காங்கேசன்துறைக்கு வந்து சேர்ந்துவிடும் எனஎதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஜெனரேற்றர்களைக் கப்பலில் ஏற்றும் பணி (10 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் ரோந்து சென்ற படையினர் மீது தாக்குதல்!

கொழும்பு, ஜூன் 29

மன்னார் மாவட்டத்தில் உள்ள கல்மோட்டையில் ரோந்து சென்ற பொலீஸார் மீது விடுதலைப் புலிகள் சிறு ஆயுதங்கள் கொண்டு தாக்குதல் நடத்தினர். பொலீஸார் சிறுஆயுதங்களைக் கொண்டு பதில் தாக்குதல் நடத்தினர்.

மேலதிக படையினரும் அப்பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதனையடுத்துத் தேடுதல் நடத்திய படையினர் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவரின் சடலத்தைக் கண்டெடுத்தனர் என்றும் —

விடுதலைப்புலிகளின் தாக்குதலில் காயமடைந்த இரு பொலீஸ் கான்ஸ்டபிள்கள் அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் — பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## பயணிகள் கப்பல் சேவை 11ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ்ப்பாணத்துக்கும்— திருகோணமலைக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவை எதிர்வரும் 11 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சேவைக்காக அமர்த்தப்பட்டுள்ள இக் கப் (10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டிப்ளோமா மாணவர்கள்

# பட்டப்படிப்புக் கல்வியை தொடருவதற்கு அனுமதி

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ். பல்கலைக்கழகத்தில் டிப்ளோமா கற்கை நெறியைப் பயிலும் மாணவர்கள் பட்டப் படிப்புக் கல்வியைத் தொடர அனுமதிக்கப்படுவர் என்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அதிகாரிகளுடன் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என். ஆர். இராமேஸ்வரன் நடத்திய பேச்சுக்களின் போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டதாக அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு ஒன்று தெரிவித்தது. (இ-3)

## யாழ். பல்கலைக்கழக

# நிர்வாகப் பணிகள் கணனி மயமாகும்

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ். பல்கலைக் கழகத்தின் நிர்வாகச் செயற்பாடுகள் அனைத்தும் கணனி மயப்படுத்தப்பட உள்ளன.

நிதிப் பிரிவு, நிர்வாகப் பிரிவு உட்பட அனைத்துப் பகுதிகளையும் கணனி மயப் படுத்துவதற்கான ஆரம்ப கட்ட வேலைகள் தொடங்கப்பட்டுள்ளதாக பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை தெரிவித்தார்.

கணனி மயப்படுத்தும் நோக்கில் சம்பந்தப்பட்ட ஊழியர்கள் அனைவருக்கும் பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. பெரும் பாலும் அடுத்தமாத இறுதியளவில் பல்கலைக் கழக செயற்பாடுகள் அனைத்தும் கணனி மயப்படுத்தப் பட்டுவிடும் எனத்தாம் எதிர் பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ-9)

# பிரதேச சபைகளுக்கு தொலைபேசி வசதி

கொழும்பு, ஜூன் 29

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச சபைகளுக்கும் தொலைபேசி வசதி வழங்கப்படவிருக்கிறது.

கொழும்பில் நேற்று முன் தினம் நடந்த வடமாகாண மீள் குடியமர்வு, புனர்வாழ்வு அதிகாரசபைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

யாழ். மாவட்ட தொலைபேசிச் சேவையைச் சீரமைக்கும் குழுவின் கூட்டம் அதிகார சபையின் தலைவர் என். கே. ஒபடகே தலைமையில் நடந்தது.

இக் கூட்டத்தில் ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகமும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவும் பங்கு பற்றினார்.

இங்கு எடுக்கப்பட்ட ஏனைய முடிவுகள் வருமாறு:

★ வியாபார நிலையங்கள் தொலைபேசி இணைப்புப் பெற இனிமேல் தகுதியான காரணங்களைக் காட்ட வேண்டும்.

★ தொலைபேசி இணைப்பு அனுமதிக்கப் பட்டவர்களின் பெயர் விவரங்களை ''உதயன்'' பத்திரிகையில் வெளியிடுவது.

★ நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, வேலணை ஆகிய இடங்களில் உள்ள உப-தபாலகங்களுக்கு தொலைபேசி இணைப்பை உடன் வழங்குவது. (இ-3)

யாழ்.
றீகல் வெண் திரையில்
(25 அடி அகலத் திரையில்)
10-30 மணிக்கு
அரவிந்தசாமி, மனிஷா கொய்ராலாவின்
பம்பாய்
(CD வெளியீடு)
2-30 மணிக்கு
சுப்பர்ஸ்ரார் ரஜனி, கௌதமி, ஜனகராஜ்
பணக்காரன்
(CD வெளியீடு)
தினசரி 5 மணிக்கு
ஆங்கிலத் திரைப்படம் காண்பிக்கப்படும்.
(57221)

உ
யாழ். வண்ணை
ஸ்ரீ விசுவேச விநாயகர்
தேவஸ்தானம்
மஹோற்சவ விஞ்ஞாபனம் - 1998
30-06-98 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-30 மணிக்கு கொடியேற்றம்.
07-07-98 செவ்வாய்க்கிழமை மாலை 5-30 மணிக்கு சப்பறத் திருவிழா.
08-07-98 புதன்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு இரதோற்சவம்.
09-07-98 வியாழக்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு தீர்த்தோற்சவம்.
மாலை 4-00 மணிக்கு கொடியிறக்கம்.
ஷெ தேவஸ்தானம்
ஐயனார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.
(57217)

பிரதிக்கு முந்துங்கள்!
வார - மாத இந்திய சஞ்சிகை
விற்பனையாகின்றன.
ஸ்ரீலங்கா புத்தகசாலை
234, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(57178)

## தேர்தலுக்கு பாதுகாப்பு தர முடியாத

# அரசாங்கம் சார்க்மாநாட்டை எப்படி நடத்தப்போகின்றது?

## ரணில் கேள்வி

கொழும்பு, ஜூன் 29

மாகாணசபைத்தேர்தலுக்குத் தேவையான பாதுகாப்பை வழங்க முடியாத அரசு எப்படி அடுத்த மாதம் சார்க்மாநாட்டைக் கொழும்பில் நடத்தப்போகிறது?

இப்படிக் கேள்வி எழுப்பினார் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

இங்கிரியவில் நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கேள்வி எழுப்பியுள்ளார்.

உண்மையான பிரச்சினை பாதுகாப்பல்ல, அரசாங்கம் மாகாண சபைகளுக்கான தேர்தலைத் தவிர்க்க விரும்புகிறது. மாகாணசபைத்தேர்தலாக இருந்தால் என்ன, ஜனாதிபதித் தேர்தலாக இருந்தால் என்ன எதையும் சந்திக்க நாம் தயாராக இருக்கின்றோம்— இப்படி ரணில் கூறினார். (இ-3)

# தென்னை மரத்திலிருந்து விழுந்துகாயம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

கள்சீவுவதற்கு தென்னை மரத்தில் ஏறியவர் தவறி விழுந்து காயமடைந்தார்.

கொக்குவில் பூநாறி ஒழுங்கைப் பகுதியில நேற்று முன்தினம் இடம் பெற்ற இச்சம்பவத்தில் குமாரசாமி ரமேஷ்கரன் (வயது 18) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (இ-15)

# சமூகஉளவள பயிற்சியாளர் தெரிவு

சமூக— உளவளப் பயிற்சியாளர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்களை யாழ்.— சுகவாழ்வு நிலையம் கோரியுள்ளது

சமூகசேவையில் ஈடுபாடு உடையவர்கள்— குழந்தைகளின் நலன்பேண்தகுதியுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் சுயமாக தயாரிக்கப்பட்டசுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை ''வண. எஸ். டேமியன் சுகவாழ்வு நிலையம் 514/1 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்'' எனும் முகவரிக்கு எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்பதாக அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

யாழ்.குடாநாட்டில்இருந்து 20 பயிற்சியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு தகுந்த வேதனத்தில் விரைவில் பணிக்கு அமர்த்தப்படுவர் என அதன் இயக்குநர் தெரிவித்தார். (ஐ-185)

நாகம்ஸ்
சினிமா
சுன்னாகம்:
அகல வெண் திரையில்
29-06-98 திங்கள்
கமல்-மீனா, நாசர்
ஜெமினி நடித்த
அவ்வை சண்முகி
(C.D. வெளியீடு)
காட்சிகள்:- 10-30, 2-30
(57220)

ராஜா டாக்கீஸ்
யாழ்ப்பாணம்.
3 ஆவது வெற்றிவாரமாக
ரஜனி - நக்மா
ரகுவரன், ஜனகராஜ்
நடித்த
பாட்ஷா
தினசரி
10-30 — 2-00, 5-00
(புதிய நேரம்)
(சி/3917)

லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
இன்று முதல்
ரமேஸ் அரவிந்,
சரத்குமார், ஹீரா
நடித்த
வசந்தகாலப்பறவை
நேரம்:- 10-30 2-30
(புதிய நேரம்)
Tel. No. 021 [illegible]
(57176)

# பிரசவித்த குழந்தையை கைவிட்டுச்சென்ற தாயார்

## ஆஸ்பத்திரியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

குழந்தை ஒன்றைப் பிரசவித்த இளம்பெண் ஒருவர் அக்குழந்தையைக் கைவிட்டு தலைமறைவான சம்பவம் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

யாழ். போதனா வைத்தியசாலையில் பிரசவ விடுதியில் அனுமதிக்கப்பட்ட பிரஸ்தாப பெண்வெள்ளிக்கிழமைமாலை பெண் குழந்தை ஒன்றைப் பிரசவித்தார்.

மறுநாள் காலை அருகில் உள்ள மற்றொருநோயாளியிடம் குழந்தையைப் பார்த்துக் கொள்ளுங்கள் மல சலகூடத்துக்குப் போய்வருகின்றேன் எனக் கூறிவிட்டுப் புறப்பட்டவர் திரும்பிவரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

அநாதரவாக விடப்பட்ட அக்குழந்தை தற்போது ஆஸ்பத்திரியில் நிறை குறைந்த குழந்தைகளைப் பராமரிக்கும் பிரிவில் வைத்து பராமரிக்கப்பட்டுவருகிறது.

இது பற்றி ஆஸ்பத்திரிப் பொலீஸாரிடமும் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-139-15)

# ஆழியவளை பாடசாலை; உயர்தர வகுப்பு ஆரம்பம்

செம்பியன்பற்று, ஜூன் 29

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி கல்விக்கோட்டத்தில் உள்ள ஆழியவளை சி. சி. த. க. பாடசாலையில் உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இப் பாடசாலை செம்பியன்பற்றுப் பகுதியிலேயே தற்போது இயங்கி வருகிறது. இப்பாடசாலையில் உயர் தர வகுப்பினை ஆரம்பிக்க கல்விக்கோட்டம் மேற்கொண்ட நடவடிக்கையை இப்பகுதிப் பெற்றோர்கள் பாராட்டி உள்ளனர்.

இப்பாடசாலையில் உயர் தர வகுப்பு ஆரம்பிக்காமல் இருந்திருந்தால் இப்பகுதி மாணவர்கள் பருத்தித்துறை, பளைப், பகுதிகளில் உள்ள பாடசாலைகளுக்கே செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கும்.

இப்பாடசாலையில் தற்போது கலைப்பிரிவு வகுப்பு மட்டுமே ஆரம்பிக்கப்படுவதாகவும், எதிர்காலத்தில் வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் போன்ற பிரிவுகளையும் ஆரம்பித்து மாணவர், பெற்றோரின்எதிர்பார்ப்பை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பாடசாலை அதிபர் ச. திரவியராசா தெரிவித்தார்.

## பல்கலை அனுமதிக்கான

# முதலாவது விண்ணப்பப் படிவம் பெற அலைச்சல்

வலி.தென்மேற்கு, ஜூன் 29

1997 ஆம் ஆண்டு உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதி பெற்ற பலர் முதலாவது விண்ணப்பத்தை (FirstForm) அனுப்புவதற்குரிய படிவங்கள் கிடைக்காததால் அலைந்து திரிகின்றனர்.

முன்னர் இந்தப் படிவங்களை பல்கலைக் கழக மானிய ஆணைக் குழுவுக்கு விண்ணப்பித்து பெறக்கூடியதாக இருந்தது. ஆனால் அதில் ஏற்பட்ட காலதாமதத்தை அடுத்து யாழ். பல்கலைக் கழக நிர்வாகம் மானிய ஆணைக்குழுவிடமிருந்து விண்ணப்பப்படிவங்களைப் பெற்று விநியோகித்து வந்தது.

ஆனால் கடந்த ஆண்டும், இவ்வாண்டும் இந்தப் படிவங்களை விநியோகிக்கும் உரிமையை மானிய ஆணைக் குழு தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வழங்கியது. அதன் பின்னர் படிவங்களைப்பெறுவதில் சிரமம் ஏற்பட்டிருப்பதாக மாணவர்கள் தெரிவித்தனர்.

பல்கலைக் கழக அனுமதிக்கான முதலாவது விண்ணப்பத்தை அனுப்ப வேண்டிய இறுதித் தினம் கடந்த 26 ஆம் திகதியுடன் காலாவதியாகி விட்டது.

எனினும் படிவங்களைப் பெறுவதற்காக மாணவர்கள் தொடர்ந்தும் அலைந்துதிரிகின்றனர். (ஐ-185)

# உதவிப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஜூன் 29

வைத்திய கலாநிதி பொன். இராமநாதன் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் வடபிராந்திய உதவிப் பணிப்பாளராகப் பொறுப்பேற்றுள்ளார்.

கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக இங்கு உதவிப் பணிப்பாளராகக் கடமையாற்றிய வைத்திய கலாநிதி திருமதி ஞா. சிவபாதசுந்தரம் ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தின் யாழ். மாவட்ட திட்ட அலுவலகத்தில் சிரேஷ்ட திட்ட அலுவலகராகக் கடந்த மூன்று மாதங்களுக்கு முன் பதவியேற்றுச் சென்றதை அடுத்து இப்புதிய நியமனம் இடம் பெற்றது. (இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை விவகாரத்தில் தலையிடுவதில்லை என்ற இந்தியாவின் கொள்கையில் மாற்றமில்லை!

## வெளிவிவகார அமைச்சு செயலர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 29

இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையில் தலையிடுவதில்லை என்ற இந்தியாவின் கொள்கையில் மாற்றமில்லை அக்கொள்கை தொடர்ந்தும் கடைப்பிடிக்கப் படும்.

இந்திய வெளியுறவுச் செயலாளர் கே. ரகுநாத் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொழும்பு தமிழ் வார ஏடு ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில் மூன்றாந் தரப்பு மத்தியஸ்தத்தைஇந்தியா ஆதரிக்கவில்லை. மூன்றாந் தரப்பு மத்தியஸ்தத்தில் இந்தியா நம்பிக்கை கொள்ளவும் இல்லை என்றும் அப்பேட்டியில் அவர் கூறியிருக்கிறார்.

இலங்கை விவகாரம் குறித்து குறிப்பாக இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியாவின் நிலைப்பாடு எத்தகையதாக உள்ளது என்று வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் இன்று நிலவுகின்ற நெருக்கடி நிலையை ஒரு முடிவுக்குக் கொண்டு வருமுகமாக இந்தியா புதிதாக தீர்வு யோசனைகளை முன்வைக்கவுள்ளதா? அல்லது இந்திய — இலங்கை உடன்படிக்கைக்கமையக் கொண்டு வரப்பட்ட அரசமைப்பின் 13 ஆவது சரத்தை தொடர்ந்தும் ஆதரிக்கின்றதா என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில்—

இந்தியா இனப் பிரச்சினைக்கான தீர்வு குறித்து எவ்வித யோசனைகளையும் முன் வைக்கவில்லை. ஒன்றுபட்ட ஸ்திரமான இறைமையைக் கொண்ட ஒரு நாடு என்ற வரையறைக்குள் அமைந்த தீர்வையே இந்தியா விரும்புகின்றது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பரஸ்பரம் நல்லுறவு நிலவுகின்றது. இரு நாடுகளுக்குமிடையில் அரசியல் உயர்மட்டத்தில் மிக நெருங்கிய தொடர்புள்ளது.

இலங்கையின் வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அண்மையில்கூட டில்லிக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்தார். இதன் மூலம் இலங்கை குறித்த விவகாரங்களில் தேவையான தகவல்களை இந்தியா பெற்றுவருகிறது. அந்தத் தகவல்களின் அடிப்படையில் இந்தியா தனது முடிவுகளை மேற்கொண்டு செயற்படும் என்று அவர் தெரிவித்தார்.

சார்க் மாநாட்டில் கலந்து கொள்ள வருகைதரும் இந்தியப் பிரதமர் இனப்பிரச்சினை தொடர்பாக தீர்வு யோசனைகள் அடங்கிய பொதியுடன் வரவுள்ளதாகவும் இது குறித்து இலங்கை ஜனாதிபதியுடன் பேசவுள்ளதாகவும் ஊகங்கள் அடிபடுகின்றனவே. அது உண்மையா என்று கேட்டபொழுது —

''அது பற்றிக் கூறுவது கடினம்'' என்று பதிலளித்த அவர் நாடுகளின் தலைவர் ஒன்று கூடும் போது பல்வேறு விடயங்கள் குறித்து தமக்கிடையில் அவர்கள் கலந்துரையாடுவது இயல்பான ஒரு விடயமே என்றும் பதிலளித்தார்.

வடக்கு-கிழக்கில் தொடர்ந்து கொண்டிருக்கும் போர் காரணமாகப் பொதுமக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கும், சிரமங்களுக்கும் முகங் கொடுக்கின்றனர். இவற்றிலிருந்து விமோசனம் பெற்றுக் கொடுக்க இந்தியா முன்வர வேண்டும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனரே எனக் கேட்டபோது—

பொது மக்களின் விடயத்தில் இந்தியா அக்கறையாக உள்ளது. இலங்கை அரசாங்கத்திற்கூடாகத் தேவையான உதவிகளை இந்தியா அளித்து வருகின்றது. அண்மையில் யாழ்ப்பாண நூலகத்திற்கென ஒரு தொகைப் புத்தகங்களை இந்தியா வழங்கியுள்ளது என்று பதிலளித்தார்.

வட பகுதியில் நடைபெறும் போர் காரணமாகப் பொதுமக்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உதவ வேண்டும் என்று கூறியே 1987 ஆம் ஆண்டு யாழ். குடாநாட்டுப் பகுதியில் இந்தியா உணவுப் பொதிகளை விமானத்திலிருந்து போட்டது. ஆனால் இன்றோ நிலைமை குறிப்பாக, பொது மக்களின் நிலைமை மிக மோசமாக இருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன பொது மக்களின் நிலைமை மிக மோசமாக இருந்தும் இந்தியா அமைதியாக உள்ளது என்று கூறப்படுகின்றதே என்று வினவியபோது —

'' இன்று நிலைமை மாறிவிட்டது '' ( Situation has changed ) என்று அவர் பதிலளித்தார்.

இவ்வாறு அப் பேட்டியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

## 40 சடலங்கள் ஒப்படைப்பு

பெய்ரூட், ஜூன் 29

இஸ்ரேலியப் படைகளால் கொல்லப்பட்ட 40 லெபனான் கெரில்லாக்களின் சடலங்களை இஸ்ரேல் லெபனானிடம் ஒப்படைத்துள்ளது,

இஸ்ரேல் படைகளுக்கும், லெபனான் கெரில்லாக்களுக்கும் இடையே நடந்த மோதலில் பலியானவர்களின் சடலங்களே அவை.

தென் லெபனானில் இடம் பெற்ற மோதலில் பலியான இஸ்ரேல் சார்ஜன்ட் ஒருவரின் சடலத்தை பெற்றுக் கொள்வதற்குப் பதிலாகவே இஸ்ரேல் இந்த 40 சடலங்களையும் ஒப்படைத்தது.

உலக அரங்கில்

## புதிய முன்னணி அமைப்பு

புதுடில்லி, ஜூன் 29

சமாஜவாதிக் கட்சித்தலைவர் முலாயம் சிங் யாதவ்வும் ராஷ்டிரீயஜனதாதள் கட்சித் தலைவர் லாலுபிரசாத் யாதவ்வும் இணைந்து 'தேசிய ஜனநாயக முன்னணி' என்ற புதிய முன்னணியை அமைத்துள்ளனர்.

பாரதிய ஜனதாக்கட்சி அரசு நாட்டில் நெருக்கடியான நிலையை ஏற்படுத்தி விட்டது. எனவே சமய சார்பற்ற கட்சிகள் புதிய முன்னணியில் இணைந்து கொள்ளுமாறு இரு தலைவர்களும் அழைப்பு விடுத்துள்ளனர். (ஐ-6)

# துருக்கியில் கடும் பூகம்பம் 100 பேருக்கு மேல் பலி!

அங்காரா, ஜூன் 29

துருக்கியின் தென்பகுதி நகரான அடனாவை கடும் பூகம்பம் தாக்கியுள்ளது நூற்றுக்கு மேற்பட்டோர் உயிரிழந்தனர்; ஏராளமானோர்காயமடைந்தனர்.

பூகம்பம் தாக்கிய பகுதியில் கட்டடங்களுக்கு பலத்த சேதம் ஏற்பட்டிருக்கிறது. தொலைத்தொடர்பு,நீர்,மின்விநியோகம்என்பனமுற்றாகச் செயலிழந்துள்ளன. மீட்புப்பணி முழு வீச்சில் நடைபெற்றுவருகிறது. (ஐ ரீ)

# முறைப்படி தொழுகை நடத்த உத்தரவு!

## தலிபான் விருத்தது!

காபூல், ஜூன் 29

ஆப்கானிஸ்தானின் பெரும் பகுதியைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் தலிபான் அமைப்பு அங்கு மக்கள் முறைப்படி தொழுகை மற்றும் பிரார்த்தனைகளில் ஈடுபட வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறது.

மக்கள் முறைப்படி தொழுகையில் ஈடுபடுகின்றனரா என்பதைக் கண்காணிக்க கண்காணிப்பாளர்களை நியமிக்கும் படி தலிபான் அமைப்பின் உயர் தளபதி மொஹமட் ஓமார் உத்தரவிட்டுள்ளார்.

எவ்வாறு பிரார்த்திப்பது என்பதை மக்களுக்குப் போதிப்பதற்காக விசேட வானொலி நிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளன.

முறைப்படி தொழுகை நடை பெறுகிறதா என்பதைக் கண்டறிய மதப் பொலீஸார் மக்களைச் சோதனை செய்யவுள்ளனர்.

தலிபான் இயக்கம் தனது அதிகாரத்துக்குட்பட்ட பகுதிகளில் கடுமையான இஸ்லாமியச் சட்டங்களை அமுல் செய்துவருகிறது. (ஐ)

# தியனன்மென் சதுக்கத்தில் கிளின்ரனுக்கு வரவேற்பு

பேய்ஜிங், ஜூன் 29

ஒன்பது நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு சீனா சென்றுள்ள அமெரிக்க அதிபர் பில் கிளின்ரனுக்கு பேய்ஜிங்கில் தியனன்மென் சதுக்கத்தில் அரச மரியாதைகளுடன் கூடிய வரவேற்பு அளிக்கப்பட்டது

புதன்கிழமை சீனப் பயணத்தை ஆரம்பித்த கிளின்ரனும் அவரது குடும்பத்தினரும் முதலில் சியான் என்ற பழைய சீன நகருக்குப் போய்ச் சேர்ந்தனர். பின்னர் அங்கிருந்து நேற்று முன்தினம் அவர்கள் பேய்ஜிங் சென்றடைந்தனர்.

தியனன்மென் சதுக்கத்தில் 21 பீரங்கிக் குண்டுகள் முழங்க, ராணுவ பான்ட் வாத்தியங்கள் இசைக்க கிளின்ரனுக்கு கோலாகல வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்த வைபவத்தில் சீன அதிபர் ஜியாங் செமினும் உயர் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

1989 ஆம் ஆண்டு ஜனநாயக உரிமை கோரி ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்கள் நூற்றுக்கணக்கானோர் தியனன்மென் சதுக்கத்தில் வைத்து சீன மக்கள் படையால் கொன்றொழிக்கப்பட்டனர்.

அந்தச் சம்பவத்தை அமெரிக்கா உட்பட முழு உலகுமே கடுமையாகக் கண்டித்திருந்தது.

வரலாற்றில் இடம் பெற்ற அச்சம்பவத்தின் பின் அமெரிக்க அதிபர் ஒருவர் சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் செய்தது இதுவே முதன் முறையாகும்.

படுகொலைகள் நடந்த அதே சதுக்கத்தில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு விழாவில் அதிபர் கிளின்ரன் உரையாற்றினார்.

அமெரிக்கப் பிரதிநிதிகள் சபை உறுப்பினர்கள் மற்றும் உள்நாட்டு விமர்சகர்களின் ஆட்சேபத்துக்கு மத்தியிலேயே தியனன்மென் சதுக்கத்தில் நடந்த வரவேற்பு விழாவில் கிளின்ரன் கலந்து கொண்டார்.

ஜனநாயக உரிமை கோரியோர் மீது அன்று பிரயோகிக்கப்பட்ட பலம் அதனால் ஏற்பட்ட உயிரிழப்புக்கள் எல்லாமே தவறு என்று அமெரிக்க மக்கள் நம்புவதாக அதிபர் கிளின்ரன் அங்கு ஆற்றிய உரையில் தெரிவித்தார். [ஐ]

# அல்ஜீரியாவில் பிரபல பாடகர் படுகொலை

## தீவிரவாதிகள் கைவரிசை

அல்ஜீரியர்ஸ், ஜூன் 29

அல்ஜீரியாவின் பிரபல பாடகரான லோன்ஸ் மாடுப் என்பவர் முஸ்லிம் தீவிரவாதிகளால் கொலை செய்யப்பட்டார்.

கிராமம் ஒன்றில் 17பேர் கழுத்து அறுக்கப்பட்டு கொல்லப்பட்ட சம்பவத்தின் பின்னர் பாடகர் லோன்ஸ் மாடுப்பையும் தீவிரவாதிகள் கொன்றதாக அல்ஜீரிய அரச இராணுவம் தெரிவித்துள்ளது.

முஸ்லிம் தீவிரவாதிகளுக்கு எதிராக பாடகர் லோன்ஸ் தீவிர பிரசாரம் மேற்கொண்டு வந்தார். இவரது மறைவு குறித்து பிரான்ஸ் ஜனாதிபதி ஜெக்சிராக் கவலை வெளியிட்டுள்ளார்.

ஆயிரக்கணக்கான மக்கள் லோன்ஸின் மறைவால் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். நேற்று அவரது மரணச் சடங்குகள் நடைபெற இருந்தது. அதனால் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

பாடகர் கொல்லப்பட்ட சம்பவத்தில் அவரது மனைவி காயமடைந்தார். (ஐ)

# அங்கோலாவுக்கான ஐ.நா. பிரதிநிதி விமான விபத்தில் சிக்கி உயிரிழந்தார்!

அபிட்ஜான், ஜூன் 29

அங்கோலாவுக்கான ஐ. நா. விசேட பிரதிநிதி அலி ஒன்பிளென்டன்பே விமான விபத்தில் பலியானார்.

அவரையும் வேறு 6 பேரையும் ஏற்றிச் சென்ற விமானம் ஐவரிகோஸ்ட் நாட்டில் வீழ்ந்து நொறுங்கியதாக முதலில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

விமானம் வீழ்ந்த இடத்தை கண்டறிவது சிரமமான பணியாக இருப்பதாக ஐவரி கோஸ்ட் அதிகாரிகள் தெரிவித்தனர்.

விமானச் சிதைவுகளைத் தேடும் பணியில் ஹெலிக்கொப்டர்கள் ஈடுபடுத்தப் பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் இராஜதந்திரியான அலிஒன்பிளென்டன்பே அங்கோலா தொடர்பான விவகாரங்களில் நிபுணத்துவம் மிக்கவராகக் கருதப்படுபவர். அங்கோலா சமாதான உடன்பாடு ஏற்படப் படுவதில் அவர் முக்கிய பங்காற்றியிருந் தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### வீடு விற்பனை

J/79 சிறாம்பியடி, யாழ். வீதியில் இல. 3, வீடும், 2¼ பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. பிற்பகல் மூன்று மணிக்குப் பின்னர் தொடர்பு கொள்ளவும்: 51, வைமன், வீதி, நல்லூர். (57205)

### தவறிவிட்டது

வாசுகி கனகசுந்தரம் பிள்ளை ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (726181187V) நல்லூரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 676, பருத்தித்துறை வீதி, நல்லூர் என்ற விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். (57201)

### O/L MATHS 98

33 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் அண்ட சராசர முறையில் ஆரம்ப அறிவினை 2 மணித்தியாலங்களில் நிறைவேற்றப்படும். இம்முறையைப் பயன்படுத்தி சகல அலகுகளையும் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். க. ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை சுண்டுக்குளி. (57188)

### இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி (Broilers) விற்பனைக்கு உண்டு. அருள் ஆச்சிரமம், 5, கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். (57194)

### யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள் மனிதர்களே இல்லாத யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த கதை. 300 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை வீரகேசரியில் எழுதிய கட்டுரைகள் எங்கும் கிடைக்கும். ரூபா 50. (57014)

### கோழி மருந்து

30-06-98 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கோழிகளுக்கான கம்புறோ, ரணிகெற் மருந்துகள் வழங்கப்படும். தேவைப்படுவோர் வந்து பெற்றுக் கொள்ளவும் மல்லிகாபதி, சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (57209)

### புறோயிலர் குஞ்சு

பிறிமா புறோயிலர் ஒரு நாள் குஞ்சுகள் 30—06—98 செவ்வாய் மாலையிலிருந்து விநியோகிக்கப்படும். பதிவு செய்தோரும் மற்றும் தேவைப்படுவோரும் பெற்றுக் கொள்ளவும். மல்லிகாபதி, சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (57210)

## புனரமைப்பு ஆரம்பம்

கொழும்புத்துறை, ஜூன் 29 கட்டைப்பிராய்கோப்பாய் தெற்கு சரஸ்வதி சனசமூக நிலையம் பாலர் பாடசாலை புனரமைப்பு வேலைகள் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமானது. (ஐ-30)

## மின் தடை

அரியாலை. ஜூன் 29 கொழும்புத்துறை சுவாமியார் வீதிக்கான மின் விநியோகம் கடந்த சில நாள்களாகத் தடைப்பட்டுள்ளது.

பாசையூர் பகுதி ஜெனரேற்றர் மூலம் வழங்கப்படும் இந்த மின்சாரம் பாஷையூர், ஈச்சமோட்டை சந்திப் பகுதியில் உள்ள மின்சார கேபிள்களில் ஏற்பட்ட கோளாறினாலேயே தடைப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-17)

---

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்

# பாராட்டுகின்றோம்

1997 மார்கழி மாதத்தில் நடைபெற்ற க.பொ.த (சா/த) பரீட்சையில் சுருக்கெழுத்து தட்டச்சு பாடத்திற்குத் தோற்றி விசேட சித்தி (டி), திறமைச்சித்தி [சி] பெற்ற கீழ்க் குறிப்பிட்ட கழக மாணவர்களைப் பாராட்டுகின்றோம்.

### தமிழ் மொழி மூலம்

| | | |
|---|---|---|
| அ. உதயபவானி | (கரணவாய் மேற்கு) | டி |
| சி. ஜெயரூபன் | (நாவலடி, பருத்தித்துறை) | டி |
| த. முருகாம்பிகை | (மாலுசந்தி) | டி |
| ந. கிருஷ்ணதேவி | (கரணவாய் மேற்கு) | டி |
| செ. மதிரஜனி | (கரணவாய் வடக்கு) | டி |
| ஜெ. வாசுகி | (கெருடாவில்) | டி |
| க. யோகராணி | (கொம்மந்துறை) | டி |
| ச. நிர்மலா | (திக்கம்) | டி |
| இ. கவிதா | (நவிண்டில்) | டி |
| க. நந்தினி | (மண்டான்) | டி |
| இ. ஜீவா | (உடுப்பிட்டி) | டி |
| தி. நிருபா | (சமரபாகு) | டி |
| இ. கலைராணி | (கல்லுவம்) | டி |
| ச. குபீந்தினி | (கல்லுவம்) | டி |
| க. அரியமலர் | (அச்சுவேலி) | டி |
| க. கனகராஜா | (நெல்லியடி) | டி |
| ந. நஜீதா | (கொம்மந்துறை) | டி |
| பூ. சுஜாதா | (வல்வெட்டித்துறை) | டி |
| ஆ. றூபலட்சுமி | (கரணவாய்) | டி |
| வி. சுதர்சினி | (கரணவாய் மத்தி) | டி |
| க. பத்மஸ்ரீ பரிமளவதனி | (தெருமூடிமடம்) | சி |
| சி. உதயமதி | (பொலிகண்டி) | சி |
| ந. சுஜேந்தினி | (உடுப்பிட்டி) | சி |
| ச. ஜசிந்தா | (கரவெட்டி) | சி |
| மு. அமிர்தகுமாரி | (கரவெட்டி கிழக்கு) | சி |
| பூ. சுமதி | (கரவெட்டி கிழக்கு) | சி |
| இ. திருலோகராஜா | (தெருமூடிமடம்) | சி |
| சி. ஜெயவாணி | (அல்வாய்) | சி |
| க. சகிதா | (கரவெட்டி கிழக்கு) | சி |
| வ. சிவாஜினி | (அல்வாய்) | சி |
| இ. நித்தியகலா | (கரணவாய்) | சி |
| த. சசிகலா | (வல்வெட்டி) | சி |

### ஆங்கில மொழி மூலம்

| | | |
|---|---|---|
| வி. வைதேகி | (கரவெட்டி) | டி |
| சு. சுபாஜினி | (வல்வெட்டி) | சி |
| ந. பிருந்தா | (பொலிகண்டி) | சி |
| யோ. ராதா | (வல்வெட்டி) | சி |
| தே. கார்த்திகேஜினி | (கரணவாய்) | சி |
| சோ. சந்திரிக்கா | (கரவெட்டி) | சி |
| இ. வானதி | (கரவெட்டி) | சி |

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்
வதிரி, கரவெட்டி.

(சி/4133)

---



# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

ஸ்ரீ விநாயகப் பெருமானுக்கு
புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள

## சித்திரத்தேர் வெள்ளோட்டம்

01 - 07 - 98 புதன்கிழமை

அம்பிகை அடியார்களே!

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் பரிவாரமூர்த்தியாகிய ஸ்ரீ விநாயகப் பெருமானுக்கு புதிதாக அமைக்கப் பெற்ற "வேஷர" அமைப்பிலான சித்திரத்தேரின் வெள்ளோட்டம் நிகழும் வெகுதானிய வருடம் ஆனி மாதம் 17 ஆம் நாள் (01-07-1998) புதன்கிழமை பகல் 9.00 மணி முதல் 10.00 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெற உள்ளது.

தேர் நிர்மாணிப்பு:
தேவரத சிற்பமணி, சிற்பசோதி
திரு. சு. இராசரெத்தினம்
அவர்கள் தலைமையிலான திருநெல்வேலி தலங்காவில் விநாயகர் சிற்பாலய கலைஞர்கள்

அன்றிரவு, அம்பிகையின் கைலைக்காட்சி விழா முடிந்ததும், ஆலய நிகழ்ச்சி மேடையில் சிற்பக் கலைஞர் திரு. சு. இராசரெத்தினம் அவர்களையும், கலைஞர் குழுவினரையும் கௌரவித்து பாராட்டிப் பட்டமளிக்கும் நிகழ்ச்சியும் நடைபெறும். அடியார்கள் அனைவரையும் வெள்ளோட்ட நிகழ்ச்சிகளையும், பாராட்டுவிழா நிகழ்ச்சிகளையும் கண்டுகளித்து, இறைவியின் திருவருளைப் பெற்றுக் கொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

அறங்காவலர் சபை
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
நயினாதீவு.

(57185)

---

இனியும் தாமதம் வேண்டாம் விரைவாசத் தேரேறி வந்திடுவீர்! தமிழர் குறை தீர்த்திடுவீர்!!

நாளை (30 06-1998) சுழிபுரம் - பறாளாய்

## ஈசுர விநாயகரின் தேர்த் திருவிழா

சோழியூரான் பிறைசூடிக் குரு

(57180)

---

# கல்வளைப் பிள்ளையார் கோயில்

சண்டிலிப்பாய்

மேற்படி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் 29 - 06 - 98 திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கு கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பதினொரு நாள்களுக்கு திருவிழாக்கள் நடைபெற்று பதினொராம் நாள் தீர்த்தோற்சவத்துடன் விழாக்கள் முற்றுப்பெறும்.

தினசரி பிற் பகல் 5-30 மணிக்கு
சைவப்புலவர் திரு. சத்தியதாசன் ஆசிரியர்
அவர்கள் தொடர் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

தர்மகர்த்தா சபை.

(57182)

---

# கண்ணீர் அஞ்சலி

யா/பண்ணாகம் மெய்கண்டான்
மகாவித்தியாலய
முன்னாள் ஆரம்பப் பிரிவு சிரேஷ்ட ஆசிரியராகச்
சேவையாற்றி ஓய்வுபெற்ற
திருமதி அ. கனகம்மாவின்
அன்புக் கணவர்

## அமரர் பெ. அப்பாப்பிள்ளை

அவர்கள் சிவபதம் அடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
ஊழியர்கள், மாணவர்கள்.

பண்ணாகம்,
சுழிபுரம்.

(57207)

---

வலி. கிழக்கு வட பகுதி

## பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

அச்சுவேலி

# பதவி வெற்றிடம்

பதவியின் பெயர்: தட்டெழுத்தாளர் [நிரந்தரம்]

பதவியின் குறியீட்டு இலக்கம்: 31/97/13

வயதெல்லை: 25 தொடக்கம் 40 வயது வரை

சம்பள அளவுத்திட்டம்:
2700—4000
60X10—70X10

கல்வித்தகைமை:
பொருத்தமான மொழியை உள்ளடக்கி க.பொ.த. [சா/த] பரீட்சையில் 06 பாடங்களில் சித்தியுடன், தட்டச்சில் நிமிடத்திற்கு சிங்களம்/தமிழ் 20 சொற்கள் வேகம் அல்லது தட்டச்சில் ஆங்கிலத்தில் நிமிடத்திற்கு 30 சொற்கள் வேகம் இருத்தல் வேண்டும்,

குறிப்பு:
மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் சங்கத் தொழிற்பரப்பில் நிரந்தரமாக வதியும் விண்ணப்பதாரிகளிடம் இருந்து கோரப்படுகின்றன. ஏற்கனவே சங்கத்தில் பணியாற்றுபவர்கட்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி:
10 - 07 - 1998 ஆந் திகதி நண்பகல் 12.00 மணி.

விண்ணப்பப்படிவங்களை ரூபா 10 செலுத்தி சங்கத் தலைமைப் பணிமனையில் வேலை நாள்களில் பெற்றுக்கொள்ளலாம்,

பொது முகாமையாளர்,
வ. கி. வ. ப. ப. நோ. கூ. சங்கம்,
அச்சுவேலி.

[சி/4138]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கப்படும்

## இந்தியாவிலிருந்து இயந்திரங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 29 யாழ். மாவட்டத்தில் பழங்களில் இருந்து பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று அமைக்கப்படவிருக்கிறது.

யாழ். மாவட்டத்தில் உற்பத்தியாகும் பழவகைகளைச் சந்தைப்படுத்த முடியாது உள்ள நிலையை நீக்கவும் —

பழ வகைகள் வீணாகப் போவதைத் தடுக்கவும் — இந்தத் தொழிற்சாலை அமைக்கப்படவிருக்கிறது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு — செலவுத் திட்ட நிதி மற்றும் பிரதேச சபைகளின் நிதி ஆகியவற்றில் இருந்து இத்தொழிற்சாலையை அமைக்க 32 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகமும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இத் தொழிற்சாலைக்கான இயந்திரங்கள் இந்தியாவில் இருந்து தருவிக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

### வடமராட்சியில்

## பாவனைக்கு உதவாத பிஸ்கட் வகைகள் மீட்பு

வடமராட்சிப் பகுதியில் மூன்று விற்பனை நிலையங்களிலிருந்து, காலாவதியான பிஸ்கட் வகைள், சுகாதார பரிசோதகர்களின் திடீர்ச் சோதனையின் போது கைப்பற்றப்பட்டுள்ளன.

கடந்த வியாழக்கிழமை காலை பருத்தித்துறை பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ். இராசேந்திரம் தலைமையில் சென்ற குழுவினரே கிராமக் கோட்டுச் சந்தியிலுள்ள கூட்டுறவுச் சங்கத்தின் இரு விற்பனை நிலையங்களிலிருந்தும், பருத்தித்துறை பழைய பஸ் நிலையப் பகுதியிலுள்ள தனியார் விற்பனை நிலையத்திலிருந்தும் காலவதியான பிஸ்கட் வகைகளைக் கைப்பற்றினர். பின்னர் அவற்றை முற்றாக அழித்தனர்.

அன்றைய தினம் மந்திகைப் பகுதியிலுள்ள பல விற்பனை நிலையங்களும் சுகாதாரப் பரிசோதகர்களினால் சோதனையிடப்பட்டுள்ளன. (ஐ-109-173)

## டிப்ளோமா கற்ற 10 மாணவிகளுக்கு பட்டப்படிப்பு மேற்கொள்ள அனுமதி

யாழ்ப்பாணம், ஜூன் 29 யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் முதலாம் ஆண்டில் டிப்ளோமா கல்வி கற்ற பத்து மாணவிகள் தமது பதிவை ரத்துச் செய்து பட்டப் படிப்பை மேற்கொள்வதற்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் சங்கீதம், நடனம் ஆகிய கற்கை நெறிகளில் டிப்ளோமா கற்பதற்காகத் தெரிவு செய்யப்பட்டு முதலாம் வருடத்தில் கல்வி கற்று வந்த பத்து மாணவிகள் விசேட பட்டியலின் அடிப்படையில் பட்டப்படிப்பைத் தொடர்வதற்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

ஆனால் இவர்கள் டிப்ளோமா கற்கை நெறியை ரத்துச் செய்து பட்டப் படிப்பை மேற்கொள்வதற்கு வசதி செய்து தருமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

சட்டத்தின்படி பல்கலைக்கழகத்திலே ஒருவர் ஒருமுறை மட்டுமே பதிவு செய்து கற்கை நெறியைத் தொடர முடியும் எனவும் —

அத்தோடு இவர்கள் கல்வி கற்று வந்த காலப்பகுதியில் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற உதவித் தொகையினையும் பெற்று வந்துள்ளனர் எனவும் —

காரணங்காட்டி இவர்களது கோரிக்கை நிராகரிக்கப்பட்டு வந்தது.

எனினும் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தரின் கோரிக்கையை ஏற்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு இவர்கள் தமது டிப்ளோமா கற்கைநெறியை ரத்துச் செய்து, இதுவரை பெற்ற உதவுத் தொகையினையும் மீளச் செலுத்திய பின்னர் மீண்டும் பட்டப் படிப்புக்கு பதிவு செய்து கற்கை நெறியைத் தொடர்வதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

இவ்வாறு விசேட அனுமதியில் பட்டப்படிப்பைத் தொடர்வதற்கு அனுமதி பெற்றுள்ள பத்து மாணவிகளையும் எதிர்வரும் திங்கட்கிழமை தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் க. குணராசா கேட்டுக் கொண்டுள்ளார். (இ-9)

### வடமராட்சிப் பகுதியில்

## 36 கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிப்பு!

நெல்லியடி, ஜூன் 29

வடமராட்சிப் பகுதியில் ஒரே நாளில் சுமார் 36 கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டிக் கொல்லப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை காலை பருத்தித்துறை சுகாதார பரிசோதகர் வி. செல்வரட்ணம் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் பொழுதே பருத்தித்துறை நகரசபை எல்லைக்குள் சுமார் 21 கட்டாக்காலி நாய்களும், பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குள் 15 கட்டாக்காலி நாய்களும் நஞ்சூட்டி அழிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, கடந்த 17ஆம் திகதி காலை மந்திகை மருத்துவமனையிலுள்ள கட்டாக்காவி நாய்களும் நஞ்சூட்டி கொல்லப்பட்டன. (ஐ-109-173)

## பஸ்நிலையத்தில் இருந்தே நயினாதீவுக்கு பஸ் சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 29 நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலயத்தில் தற்போது நடைபெறும் வருடாந்த உற்சவத்துக்குச் செல்லும் பக்தர்களுக்கான விஷேட பஸ்சேவை யாழ். மத்திய பஸ்நிலையத்தில் இருந்தே நடைபெறுகிறது.

கடந்த வெள்ளி முதல் நயினாதீவு அம்மன் ஆலயத்துக்குச் செல்வோருக்கான விஷேட பஸ்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பஸ்நிலையத்தில் தீவுப்பகுதிக்கான பஸ்தரிப்பிடத்தில் இருந்தே பக்தர்கள் அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

பக்தர்கள் அந்த பஸ் தரிப்பிடத்தில் வைத்தே இராணுவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு பின் இராணுவத்தினரால் வழங்கப்படும் விசேட பாஸுடன் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

இதற்கான விசேட பஸ் சேவையை பாதுகாப்புக் கருதி ஆரியகுளம் சந்திப் பகுதியில் இருந்து ஆரம்பிக்க முதலில் முடிவானது தெரிந்ததே. (இ-15)

## ஆய்வரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 29 யாழ். முத்தமிழ் வெளியீட்டுக் கழகம் நடத்தும் "சேனாவரையர் உரைத் திறன்" என்றதலைப்பிலான ஆய்வரங்கு இன்று பிற்பகல் 3. 30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இலக்கண வித்தகர் இ. நமசிவாயதேசிகர் ஆய்வுரை வழங்குவார். (இ-7)

## சமய அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 29 கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு கொக்குவில் மனோன்மணி சனசமூக நிலையம் சமய அறிவுப் போட்டி ஒன்றினை நடத்தவுள்ளது.

மேற்படி போட்டியில் ஆண்டு 3 முதல் ஆண்டு 8 வரையிலான வகுப்பு மாணவர்கள் பங்கு பற்றலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## கிராமசேவகர் தரம் உயர்வு

தென்மராட்சி, ஜூன் 29 யாழ். மாவட்ட கிராம அலுவலர்களிடையே தரம் 1- க்கு பதவி உயர்வு பெற்றவர்களின் பெயர்ப் பட்டியல் யாழ். செயலகத்திற்கு கிடைத்துள்ளது.

தென்மராட்சி பிரதேச செயலக பிரிவில் சாவகச்சேரி நகர கிராம அலுவலராக கடமையாற்றும் வை. இராசரத்தினம் தரம் 1-க்கு பதவி உயர்வு பெற்றுள்ளார். (ஐ-117)

## தேசிய துணை படை வீரர் கைது!

மட்டக்களப்பு, ஜூன் 29 மட்டக்களப்பு தேசிய துணைப்படை (ராஸிக் குறூப்) வீரரொருவரின் மரணம் தொடர்பாக பொலீஸாரால் சக வீரரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பரசுராமன் மோகராஜா (24 வயது) என்பவர் நேற்று முன்தினம் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்.

இது தொடர்பாக விசாரணை மேற்கொண்ட மட்டக்களப்பு பொலீஸார் நேற்று ஏரம்ப மூர்த்தி பரமநாதன் என்பவரை கைது செய்துள்ளனர். (இ-21)

# செய்திக் கொத்து

### வதிவிடப்பயிற்சி நிலைய ஆரம்பவிழா

கொழும்புத்துறை, ஜூன் 29 யாழ். ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் அனுசரணையுடன் ஊனமுற்றோருக்காக ஆரம்பிக்கப்படவிருக்கும் வதிவிடப் பயிற்சி நிலைய ஆரம்ப விழா எதிர்வரும் புதன்கிழமை காலை 9.00 மணிக்கு சங்கத்தின் தலைவர் வைத்திய கலாநிதி என். சிவராசா தலைமையில் நடைபெறும்.

கொழும்புத்துறை வீதியில், சுண்டுக்குளி சந்திக்கு அண்மையில் இந்த வதிவிடப் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்படுகிறது. (ஐ-30)

### திருத்தவேலை தடங்கல்

நெல்லியடி, ஜூன் 29 ஆவரங்கால் பகுதியில் பிரதான வீதியில் சேதமடைந்த இரு பாலங்களைப் புனரமைப்பதற்கு வெட்டப்பட்ட அகழியில் ஊற்று நீர் தேங்கி நிற்பதனால், பலமாத காலமாக இத் திருத்தவேலை தடைப்பட்டுள்ளது. (ஐ-109)

### பிரிவுபசாரம்

செம்பியன்பற்று, ஜூன் 29 வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனை உத்தியோகஸ்தர் நலன் புரிச்சங்கம் இன்று காலை 10 மணிக்கு வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் கடமையாற்றி இடமாற்றலாகிச் சென்ற 4 உத்தியோகஸ்தர்களுக்கு பிரிவுபசார வைபவத்தை அம்பனில் உள்ள பணிமனையில் நடத்த உள்ளது. (ஐ-36)

### இருவர் சித்தி

யாழ்ப்பாணம் ஜூன் 29 யாழ். போதனாவைத்திய சாலையில் இருந்து 1997 ஆம் ஆண்டுக்குரிய எழுது வினைஞர்களுக்கானபரீட்சைக்குத் தோற்றிய நால்வரில் இருவர் சித்தியடைந்துள்ளனர்.

வைத்தியசாலை எழுது வினைஞர்களான செ. பிரசாத், திருமதி எ.பாலசுந்தரம் ஆகிய இருவருமே சித்தியெய்தியவர்களாவர். (ஐ-139)

### மதகு திருத்தம்

குருநகர், ஜூன் 29 குருநகர் கடற்கரை வீதியில்சவக்காலைச் சந்தி இராணுவ முகாமின் முன்பாகவுள்ள மதகு யாழ். மாநகரசபை வேலைப் பகுதியினரால் திருத்தப்படுகின்றது. (ஐ-51)

### விரைவில் பல் கட்டும் பணி

யாழ்ப்பாணம், ஜூன் 29 யாழ். போதனாவைத்தியசாலை பற்சிகிச்சைப் பிரிவில் மீண்டும் பல் கட்டும்பணி ஆரம்பிக்கப்படவுள்ளது.

மிக விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ள இப்பணிக்கு பல் கட்டும் தொழில் நுட்பவியலாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இந் நியமனம் தொடர்பான முன்னறிவித்தல் சுகாதார அமைச்சில் இருந்து, யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஐ-ரீ-15)

### உருக்கு அலுமாரிகள்

குருநகர், ஜூன் 29 கொழும்பில் இருந்து கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட உருக்கு அலுமாரிகள் பாடசாலைகளுக்கு விநியோகிப்பதற்காக முத்திரைச் சந்தியில் உள்ள யாழ். கல்விவலயம் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. (ஐ-51)

### யோகாசன வகுப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 29 யோகாசனப் பயிற்சி வகுப்புக்கள் யாழ். சேக்கிழார் கழகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டு நேற்று முன்தினம் சனிக்கிழமை முதல் நடத்தப்பட்டு வருகின்றன. கோண்டாவில் நெட்டிலிப்பாய் விநாயகர் ஆலய வீதியில் அமைந்துள்ள திருமுறை மண்டபத்தில் நடைபெறும் இவ்வகுப்பில் இணைந்து கொள்ள விரும்புவோர் சேக்கிழார் கழக நிர்வாகத்தினருடன் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-8)

### லீவு விவரம் திரட்டல்

நவாலி, ஜூன் 29 அரசாங்க ஊழியர்களுக்கான கஷ்ட நிவாரணப் பணத்தை அவர்கள் வேலை செய்த நாள்களுக்கு மாத்திரமே வழங்குமாறு பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு சகலதிணைக்களங்களுக்கும் அனுப்பி வைத்துள்ள சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதன் பிரகாரம் யாழ். மாவட்டத்திலுள்ள சகல திணைக்களங்களிலும் கடந்த 97 ஜனவரி முதல் ஊழியர்களின் லீவு விவரங்கள் திரட்டப்படுகின்றன. (ஐ-100)

### எய்ட்ஸ் கருத்தரங்கு

நெடுந்தீவு, ஜூன் 29 எய்ட்ஸ் நோய் பற்றிப் பாடசாலை மாணவர்களும், பொது மக்களும் அறிந்து கொள்ளும் பொருட்டு கடந்த 22ஆம் திகதி திங்கட்கிழமை எயிட்ஸ் பற்றிய கருத்தரங்கு நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

சுகாதாரப் பகுதியைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் கருத்துரை வழங்கியதுடன் எய்ட்ஸ் நோய் குறித்த வீடியோப் படக்காட்சியும் இடம் பெற்றது. (ஐ-111)

### திருவுருவப் படம் திரைநீக்கம்

கொழும்புத்துறை, ஜூன் 29 பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் அனுசரணையுடன் அண்மையில் கரவெட்டி, துன்னாலை காசிநாதர் வித்தியாலயத்தில் சுவாமி விவேகானந்தரின் திருவுருவப் படம் சுவாமி சித்ரூபானந்தாவினால் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது. (ஐ-30)

### தங்கப்பதக்கம்

வலி. தென்மேற்கு, ஜூன் 29 யாழ்ப்பாணக் கல்லூரி 175 ஆம் ஆண்டு நிறைவு தமிழ்ப்பேச்சுப் போட்டியில் முதலாம் இடம் பெற்ற செல்வி எஸ். ஆரணிக்கு தங்கப்பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. [ஐ-185]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தேவை
## தையல் வேலையாட்கள்

★ யாழ். நகரில் இயங்கி வருகின்ற பிரபல்யமான ஆடை தயாரிப்பு நிறுவனம் ஒன்றிற்கு அதிகள வில் தையல் வேலையாட்கள் தேவை.
★ ஆண்கள், பெண்கள், சிறுவர்களுக்கான ஆடை கள் வெட்டித் தைப்பவர்கள்.
(ஆண், பெண் இருபாலாரும்)
★ பிரா வெட்டித் தைப்பவர்கள் (பெண்கள்)
★ திறமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்.
★ தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி;-
விளம்பர இல. **750**

மே/பா உதயன் பத்திரிகை நிறுவனம்,
யாழ்நகர்.

(57141)

## மாட்டிறைச்சி விலை உயர்வு

வடமராட்சி, ஜூன் 29

யாழ். குடாநாட்டில் மாட்டிறைச்சியின் விலை அதிகரித்துள்ளது.

முன்னர் கிலோ 130 ரூபா முதல் 140 ரூபா வரை விற்கப்பட்டு வந்த மாட்டிறைச்சி தற்போது கிலோ 150 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இறைச்சிக்கு வெட்டப்படும் மாடுகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாலேயே இவ் விலை உயர்வு ஏற்பட்டுள்ளது. (ஐ-173)

## ஒருவர் மட்டும் நியமனம்

செம்பியன்பற்று, ஜூன் 29

வடமராட்சிகிழக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் இதுவரை ஒருவருக்கு மட்டுமே சமுர்த்தி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இப்பகுதி பாதுகாப்பு அரணுக்கு வெளியே அமைந்திருந்ததைக் காரணம் காட்டியே இங்கு சமுர்த்தி நியமனங்கள் வழங்கப்படவில்லை. (ஐ-36)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



உதயம் 13 — 05 — 1920

மறைவு 29 — 06 — 1997

அமரர்

### வினாசித்தம்பி கந்தையா

திதி: 29 - 06 - 98

உன்னையே உருக்கி வாட்டி, உதிரத்தை உணவாயூட்டி, பாசமும் பரிவுங் காட்டி, பாரில் எம் வாழ்வினுக்கு ஒளியுமூட்டி நாதன் கழல் இணைந்த எம் தந்தையே!


போற்றி! போற்றி!

- குடும்பத்தினர்

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

(57191)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 28 — 03 — 1942

மறைவு 11 — 07 — 1997

அமரர்

### நல்லதம்பி குலசிங்கம்

(பதவிநிலை உதவியாளர், பிரதேச செயலகம் வலிகாமம் வடக்கு, தெல்லிப்பழை.)

திதி: **29-06-1998**

ஆண்டு ஒன்று சென்றாலும் ஐயா! உங்கள் நினைவுகளும், நீங்கள் ஆற்றிய அரும்பணிகளும் எமது நெஞ்சை விட்டு அகல மறுக்கின்றன. எத்தனை ஆண்டு சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சை விட்டு அகலாது. உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

ஈஸ்வரி பவனம்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(57200)

## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர், சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்.

வேலணை
வைத்திய கலாநிதி
சி. இராசரத்தினம்,
121, 2 ஆம்
குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(56344)

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 17 — 07 — 1926

இறப்பு 20 — 06 — 1988

### திருமதி சரஸ்வதி கணேசன்

பாசமிகு குடும்பத் தெய்வமே!
எம் தலைவியே!
பண்புடன் எம்மை வளர்த்த அன்புத் தாயே!
எம் ஆருயிர் ஜீவனே!
நேசமுடன் உங்களை நினைக்கவே
நாளும் தலை நிமிர்ந்து
உங்கள் புகழ் பாடுகின்றோம்!
உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளை.

சிதம்பரநாதன் வேலுப்பிள்ளை கணேசன்,
''சரஸ்வதி வாசம்''
பட்டினசபை ஒழுங்கை,
மானிப்பாய்.

(56952)

## நினைவலைகள்

### ஐந்தாம் ஆண்டு



அமரர்
நமசிவாயம் இராமச்சந்திரன்

தோற்றம் 14-10-1928
மறைவு 05-02-1993

### முதலாம் ஆண்டு



திருமதி
இராமச்சந்திரன் கண்மணி

தோற்றம் 05-10-1938
மறைவு 10-07-1997

திதி: 29 - 06 - 98


எமக்காய் வாழ்ந்த எம் பெற்றோரே?
உண்ணும் பொழுதும் உறங்கும் பொழுதும்
உம்முடன் இருக்கும் நாள் ஒன்று வருமோ!
புன்னகை மறவா உம் முகமும்
புத்தொளி பரப்பும் அறிவுரையும்
வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வமானீர்!
வழிகாட்டி யார் இனி எமக்கு?
எங்கும் உங்களையே காண்கின்றோம்
என்றும் ஒளிரும் உம் நினைவு.
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்: R. ரஜினி,
320/2, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(57146)

## ஓராண்டு நீங்காத நினைவில்



பிறப்பு 20 — 09 — 1922

இறப்பு 10 — 07 — 1997

### திருமதி சின்னத்தம்பி சின்னப்பிள்ளை

திதி: 29-6-1998

அன்பால் பண்பால் எங்களிடையே வாழ்ந்த தெய்வத்தின் உறைவிடமாகிய நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து ஆண்டொன்றுசென்றாலும்எம்நெஞ்சங்களில் என்றும்நிறைந்திருப்பீர்கள். உங்கள் ஆன்மசாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கும்:

கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

கோயில்காட்டுத் தோட்டம்,
அரசர் கேணி - பளை

(சி/4129)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### நிலைமை திருந்துவதற்கு...

குடாநாட்டில் உள்ள கடைகளில் பொருள்களின் விலைப்பட்டியல் வைக்கப்பட வேண்டும் என்று உள்நாட்டு வர்த்தகத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

சகல வர்த்தக நிலையங்களிலும் சிறிது, பெரிது என்ற வேறுபாடின்றி பொருள்களின் விலைப்பட்டியல் வாடிக்கையாளரின் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும் என்பது பொதுவான வர்த்தக விதி; நீண்டகாலமாகவே நடைமுறையில் உள்ள விதி.

ஆனால் அதனை அடிக்கடி ஞாபகப்படுத்தியும், அறிவுறுத்தியும், எச்சரித்தும் நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை குடாநாட்டில் எழுவதுண்டு. வர்த்தகர்கள், வியாபாரிகள் வசதியாக அந்த விதிமுறையை மறந்து விடுகிறார்கள். அந்த மறதியின் உள்நோக்கம் தமது எண்ணப்படி பொருள்களை நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அதிகமாகவிற்று கூடுதல் லாபம் பெறுவதேயாகும்.

யாழ்ப்பாணக் குடாநாடு உட்பட தமிழ்ப்பகுதிகள் மீது பொருளாதாரத்தடைகள் விதிக்கப்பட்ட காலந்தொடக்கம் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் உட்பட சகல பாவனைப் பொருள்களுக்கும் தமிழ்ப் பிரதேச மக்கள் நாட்டின் ஏனைய பகுதி மக்களை விட அதிக விலை கொடுத்தே வாங்கவேண்டியுள்ளது.

குடாநாட்டிற்கான பிரதான தரைவழிப் பாதையால் பாதுகாப்பாகப் பயணம் செய்யக்கூடிய காலம் வரும் வரை— கப்பலையே சரக்குப் போக்குவரத்துக்குநம்பியிருக்கும் காலம் மாறும் வரை — இப்பகுதி மக்கள் ஒப்பீட்டளவில் ஏனைய பிரதேச மக்களை விட அதிக விலை கொடுத்தே பாவனைப் பொருள்களை வாங்க வேண்டிய நிர்ப்பந்தம், கட்டாயம் தொடரும்.

கப்பற் கட்டணம் மிக அதிகம். அதனால் விலைகளும் அதிகமே என்று கூறிக் கொண்டு அந்தப் போர்வைக்குள் புகுந்து கொள்ளை லாபம் அடிக்கும் சந்தர்ப்பம், வாய்ப்பு வர்த்தகர்களுக்கு நிறையவே உண்டு.

கப்பற் கட்டணத்தை வர்த்தகர்கள் தாம் ஏற்றுக் கொள்ளவில்லை. அந்தச் சுமையைப் பாவனையாளர்களிடமே சுமத்துகிறார்கள். அவ்வாறிருக்கத் தமக்குரிய லாபத்தை நியாயமான மட்டத்தில் வைத்திருக்காமல் உயர்த்தி விற்பது மிகவும் அநியாயமாகும்.

எந்தத் தொழிலுக்கும் நீதியும், நியாயமும், தர்மமும் தேவை. வர்த்தகர்களில் ஒரு சாரார் இதனை மனதிற் கொள்வதில்லை. பாவனையாளர்களிடம் கொள்ளை லாபம் அடிப்பது வர்த்தகத் தர்மம் இல்லை என்பது குறித்துச் சிறிதும் சிந்திப்பதில்லை.

ஆகையால் அவர்களைக் கண்காணித்து, கட்டுப்படுத்தி மக்கள் நலன் பேணும் வேறு பல விதிகளும் இங்கு விசேடமாக நடைமுறை செய்யப்பட வேண்டும். இங்குள்ள அதிகாரிகள் வர்த்தகர்களுடன் கைகோர்த்து நடக்காமல், கண்டும் காணாதது போல் இருக்காமல் செயற்படின் நிலைமை திருந்தும்.

# கொக்குவில் கிழக்கு குளங்கரை வெள்ளவாய்க்கால் திருத்தப்படுமா?

மழைகாலம் ஆரம்பிப்பதற்கு இன்னும் சிலமாதங்களே உள்ளன. யாழ்.குடாநாட்டின் பல பிரதேசங்கள் மழை காலத்தில் வெள்ளத்தில்மூழ்குவதுவழக்கம். மழை வந்து விட்டால்மக்கள் இன்னற்படுவதுதவிர்க்கமுடியாததொன்றே. ஆனால்வெள்ளம் தேங்கி நிற்கும் பிரதேசங்களில் மக்கள் துயருறுவது வழமையாகி விட்டது. வெள்ளத்தினால் மக்கள் இடம் பெயர வேண்டி ஏற்படுவதும், உடைமைகள் இழப்புக்கள் ஏற்படுவதும் குடாநாட்டைப் பொறுத்தவரை தவிர்க்கக் கூடியவையே.

மழைகாலமென்றால் நோய்நொடிகள் பரவும்காலமாகும். நீர்த்தேக்கங்களில் நுளம்புப் பெருக்கத்தினால் இம்முறை மலேரியாநோய் மேலும் தீவிரமாகப் பரவும் அபாயம் உண்டு எனமருத்துவ அறிக்கைகள் தெரிவிக்கிறன.

யாழ். மாநகரசபைக் குட்பட்ட பிரதேசங்களிலும், சில பிரதேசசபைக்குட்பட்ட பகுதிகளிலும் தற்போது வெள்ள வாய்க்கால்களைப் புனரமைத்து நீரைத்தேங்கவிடாது மக்களுக்கு துன்பம் ஏற்படாது தடுக்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. கடந்த காலப் போர் நடவடிக்கைகளால் வெள்ள நீர் வாய்க்கால்கள் சீரழிந்து போயுள்ளன. ஆனால் கொக்குவில் கிழக்குப் பகுதியிலுள்ள குளங்கரைவெள்ள வாய்க்கால் இயற்கையா

### செய்தி மடல்!

கவே பல வருடங்களாகத் தூர்ந்து போயுள்ளது.

கொக்குவில் கிழக்கு குளங்கரைப்பகுதியிலுள்ள வெள்ள நீர் ஓடும் வாய்க்காலைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினரிடம்வேண்டுகோள் விடுக்கப்பட்டும் திருத்துவதற்கு எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படாதது அப்பகுதி மக்களை விசனத்திற்கு உள்ளாக்கியுள்ளது.

மக்கள் செறிந்து வாழும் பொற்பதி வீதிக்கு மேற்குப் புறமாகவும், கோயில் வீதிக்குக் கிழக்குப் புறமாகவும் உள்ள பகுதி மிகவும் தாழ்வான நிலம்.

பொற்பதி வீதியூடாகக் கோண்டாவிலில் இருந்து வரும் இந்த வெள்ள வாய்க்கால் குளக்கரைப் பகுதியூடாகச் சென்றே ஆடியபாதம் வீதியில் திறக்கிறது. இப் பகுதியிலேயே மழைக் காலங்களில் வெள்ளம் ஓடாமல் தடைப்படுகின்றது.

கோண்டாவில், நந்தாவில், திருநெல்வேலிப் பகுதிகளிலிருந்து ஓடிவரும் வெள்ளம் பொற்பதி வீதியூடாக வந்து குளங்கரைப் பகுதியை அடைந்ததும் வாய்க்காலின் புவியியல் காரணிகளால் தொடர்ந்து ஓட முடி முடியாது அப்பகுதிகளிலேயே தேங்கி விடுகிறது. மழை பெய்யப் பெய்ய வெள்ளம் பெருகி வருவதால் நீர் வாய்க்காலிருந்து வெளியேறி அயலிலுள்ள வீடுகளுக்குள் செல்கிறது. இதனால் சுமார் 30 குடும்பங்கள் வரை இடம் பெயர வேண்டிய நிலையேற்படுகின்றது. வீடுகளினுள் ஜன்னல் மட்டத்திற்கு மேல் வெள்ளம் வந்த சந்தர்ப்பங்களும் உள்ளன.

இதனால் இக் குடும்பங்கள் இடம்பெயர வேண்டி ஏற்படுகிறது.

வெள்ளம் நிரம்பிய பகுதியைக் கடந்து வெளியேறும் மக்கள் பொற்பதிப் பிள்ளை

## மழை வர இடம்பெயரும் அவலத்தை நீக்கவேண்டும்.

யார் கோயிலில் தஞ்சம் புகுகின்றனர். தூர இடங்களில் உறவினர்கள் உள்ளவர்கள், வேறு வீடுகளில் சென்று தங்க முடியாதவர்களே இவ்வாறு அங்கு தங்குகின்றனர். உறவினர் வீடுகளுக்குச் செல்லக் கூடியவர்கள் தங்களது உறவினர் வீடுகளுக்குச் சென்று வெள்ளம் வடிந்தோடியதும் மீண்டும் வீடுகளுக்கு திரும்புகின்றனர்.

வீடுகளிலிருந்து வெள்ளம் வடிவதற்கு சில தினங்கள் பிடிக்கும். அதுவரை அகதி வாழ்க்கை வாழ்ந்து விட்டு மீளக்குடியேறிய மக்களுக்கு வீட்டைச்சுற்றி வளவிற்குள் ஒரே வெள்ளம். கிணறுகளுக்குள் வெள்ளம் புகுந்து விடுவதனால் சுமார் 300 யார் தூரம் வெள்ளத்தின் மத்தியில் கடந்து சென்று சுத்தமான நீரை எடுத்து வர வேண்டிய நிலை.

ஒட்டுமொத்தமாக யாழ். குடாநாட்டு மக்கள் இரண்டு பெரும் இடப் பெயர்வுகளைத் தான் சந்தித்துள்ளார்கள். ஆனால் இப்பகுதி மக்களுக்கு கடந்த 25 வருடங்களாக மழைகாலம் என்றதும் இடம்பெயர்வுதான்.

வெள்ளம் காய்ந்து வற்றும் வரை வாய்க்கால் வழியே வழிந்து ஓடாது. எனவே ஒட்டுமொத்தமாக வெள்ளம் வற்றுவதற்கு இரண்டு மாதங்கள் கூட ஆகலாம். இக் காலத்தில் இரவில் தவளைகளின் இரைச்சல்கள் நித்திரையைத் துரத்திவிடும். வெள்ளம் தேங்கி நிற்பதால் நுளம்புப் பெருக்கம் காரணமாக நோய்களின் தொல்லை உட்பட சுகாதாரச் சீர்கேடுகள் போன்ற துன்பங்கள். இவை அனைத்திற்கும் மத்தியில் அப்பகுதி மக்களிடையே நாளந்தம் உழைப்பவர்களும் உண்டு. இவர்கள் வேலைக்குச் செல்லாவிடின் வீட்டில் அடுப்பெரியாது.

இவ்வாறாக மழைகாலம் தொடங்கிவிட்டால் குளங்கரை மக்கள் படும் இன்னல்களுக்கு எல்லையே இல்லை. இவ்வாறாக மக்கள் 25 வருடகாலத்திற்கு மேலாக இன்னற் படுவதைக்கவனித்தவர்கள் கவனியாதது போல் நடப்பது ஏன் என்பது தான் அப்பகுதி மக்களின் கேள்வி.

வெள்ளப் பெருக்கேற்பட்டு இப்பகுதி வெள்ளத்தில் மூழ்கிவிட்டால் கிராம சேவையாளர் ஊடாக ஒரு வெள்ள நிவாரணம் மட்டும் சங்கக்கிளைகளில் வழங்கப்படும். அதில். பழுதடைந்த கோரரா அரிசியும் உழுத்துப் போன மைசூர்ப்பருப்பும் அடக்கம்.

வெறும் வெள்ள நிவாரணங்கள் மட்டும் போதாது. வேறு ஆக்க பூர்வமான நடவடிக்கைகளையே மக்கள் விரும்புகின்றனர்.

இந்த வெள்ளவாய்க்காலில் வெள்ளம் தேங்காது ஓடச் செய்ய வேண்டும் என்ற ஒரே நோக்கில் அப்பகுதி மக்கள் பல முயற்சிகள் மேற்கொண்டு களைத்துப் போய்விட்டார்கள்.

மழைவரும் வரை அந்த நினைப்பே இருக்காது. மழை வந்த பின் அலுவலகங்களின் படியேறும் போது "இப்போது எதுவும் செய்ய முடியாது அடுத்த வருடம் பார்ப்போம்' என்பார்கள் அதிகாரிகள். அவ்வளவுதான் அடுத்த வருடமும் வந்து விடும். இவற்றின் மத்தியிலும் பல முறை இந்த வாய்க்காலைத் திருத்துவதற்கு கடும் முயற்சிகள் எடுக்கப்படாமலும் இல்லை.

நல்லூர் பிரதேசசபை, கொக்குவில் கிராமசபை முதல் நீர்ப்பாசனத் திணைக்களம் வரை அவசரமாக கடிதங்கள் போகும். ஆனால் பதிலிருக்காது. எனவே இதற்கு ஒரு முடிவு அரச அலுவலகங்களால் கிடையாது என்பதை உறுதிப்படுத்திய அப்பகுதி இளைஞர்கள்

### அருளன்

1995 ஆம் ஆண்டு மேற்படி பகுதி வெள்ளத்தில் மூழ்கியிருந்த வேளை பொது மக்களின் உறுதுணையுடன், அயற்கிராமங்களிலுள்ள சன சமூக நிலையங்களின் உதவியுடன் சிரமதான அடிப்படையில் வாய்க்காலை அகழ்ந்தெடுப்பதற்கு முயன்றனர். சுமார் 250 மீற்றர் வரை வாய்க்காலை அகழ்ந்து வெள்ளம் வடிந்தோட அவர்கள் வழிசெய்த வேளையில் பொறியியல் காரணங்களை காட்டி அம்முயற்சிக்கு முட்டுக்கட்டை போடப்பட்டது. ஆனால் இந்தவாய்க்காலை அகழ்வதில் எந்த பொறியியல் சிக்கல்களும் இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அங்கே அவ்வாறு வாய்க்கால் வெட்டப்பட்டு வெள்ளம் ஓடச் செய்யப்பட்டால் எங்கள் வீட்டின் முன் வெள்ளம் வந்து விடுமோ என எண்ணிய சில ஆடியபாத வீதி வாசிகளின் விஷமச் செயல் அது எனப் பின்னர் புரிந்தது.

குளங்கரைப் பகுதியில் வீடுகளுக்குள் [வெள்ளம்;] மக்கள் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் தமது வீட்டின் முன்னால் 15 அடி ஆழமான வாய்க்காலில் வெள்ளம் வந்தால் நுளம்புத் தொல்லை இருக்குமோ என எண்ணிய சிலரின் மனோபாவத்தால் அதற்கு முட்டுக்கட்டை போடப்பட்டது. அதனால் சிரமதானப் பணி நிறுத்தப்பட்டு விட்டது.

பல தடவைகள் மக்கள் ஒப்பமிட்டு அனுப்பிய கடிதங்களுக்கு நடவடிக்கை எடுக்கப்படாததால் மக்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

இதனால் கடந்த இரண்டு வருட காலமாக மேற்படி வாய்க்காலைத் திருத்துவதற்கு எதுவித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை.

தற்போது அந்தந்தப் பகுதி பிரதேச சபைகள் ஊடாக சிறிய சிறிய வாய்க்கால்களைக்கூட திருத்தும் பணிகள் மும்முரமாக நடைபெறும் வேளையில் மக்கள் பெரும் துன்பத்தை சந்திக்கும் குளங்கரைப் பாலம் திருத்தப்படாதது குறித்து அப்பகுதி மக்கள் பெரிதும் கவலையடைகின்றனர்.

இது தொடர்பாக அண்மையில் நல்லூர் பிரதேச சபையிடம் வரைபடங்களுடன் மகஜர் ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது. இதுபற்றி பிரதேச சபையினரிடம் கேட்ட போது மேற்படி வாய்க்கால் நீர்ப்பாசன திணைக்களத்திற்கே உரியதாகையால் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்க முடியாதுள்ளது. நாம் அவர்களுக்கு இதுபற்றி தெரியப்படுத்தியுள்ளோம் என கூறப்பட்டுள்ளது.

எது எவ்வாறாக இருப்பினும், காலங் காலமாக மக்கள் சந்தித்து வந்த இன்னல்களுக்கு, இடம் பெயர்வுகளுக்கு, உயிர், உடைமை இழப்புக்களுக்கு தீர்வுஒன்று கிடைக்க அனைத்துப் பகுதியினரும் விரைவான நடவடிக்கைகள் எடுப்பதற்கு முன்வர வேண்டும்.

இவ்வருடமும் மழைகாலம் தொடங்கினால், வெள்ளப் பெருக்கு ஏற்பட்டால்...வழமையாக மக்கள் அனுபவித்த இன்னல்களைப் போக்க சாதாரண நிவாரணங்களோடு நிற்காமல் ஆக்கபூர்வ நடவடிக்கைகள் ஏதாவது எடுக்க எவராவது முன்வரவேண்டும் என்பதே இப்பகுதி மக்களின் எதிர்ப்பார்பாக உள்ளது. ★

### நாளை

ஆனி - 16
செவ்வாய்க்கிழமை
திதி: ஷஷ்டி
முற்பகல் 10.45 வரை.
நட்சத்திரம்: பூரம்
முற்பகல் 11.37 வரை.
இரவு நடேசரபிஷேகம்
சுபநேரம் 10.26 - 11.56
ராகுகாலம்: 02.56 - 04.26
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

பீரங்கிக் குண்டுக்கு அசையாத மனிதன் இருககலாம்; ஆனால் அன்புக்கு அசையாத மனிதன் இருக்கமுடியாது.

- காண்டேகர்

## காசோலை தாமதம் ஓய்வூதியர் ஏமாற்றம்

காலாவதி திகதிக்குப் பின்னர் காசோலை வங்கிக்கு கிடைத்ததால் ஓய்வூதியம் பெறமுடியாத நிலை பளைப் பிரதேச உள்ளூராட்சி ஓய்வூதியர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

ஏப்ரல் மாதத்திற்கான ஓய்வூதியம் வழங்கவென கொழும்பு உள்ளூராட்சி ஓய்வூதியப் பிரிவினரால் கடநத ஏப்ரல் ஆறாந் திகதி அனுப்பப்பட்ட காசோலையும், அட்டவணையும் கடந்த 24 ஆம் திகதி பளை கிராமிய வங்கிக்குக் கிடைத்துள்ளன. இக் காசோலை பளை கிராமிய வங்கியினால் சாவகச்சேரி மக்கள் வங்கியில் வைப்பிலிட்டு பின்னர் அங்கிருந்து கொழும்பு வங்கியில் வைப்பிலிடுவதற்கு முன் காசோலையின் திகதி காலாவதியாகிவிடும் என்பதால் ஏப்ரல் மாதத்திற்குரிய ஓய்வூதியக் காசோலை கொழும்பு உள்ளூராட்சி ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பி மறு திகதியிட்டு வந்ததும் ஓய்வூதியம் வழங்கப்படுமென கிராமிய வங்கி முகாமையாளர் தெரிவித்ததாக ஓய்வூதியர்கள் தெரிவித்தனர்.

(...-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் செயலாளர்
திரு. கு. கணேசலிங்கம்
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி நாகம்மா குருசாமி**

அவர்கள் சிவபதமடைந்தமையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தை அவரின் குடும்பத்தினருக்கு தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், உத்தியோகத்தர்கள்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை,

(57206)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 16 — 11 — 1938



உதிர்வு 30 — 05 — 1998

திருமதி
**பரிமளம் மகேந்திரசிங்கம்**

இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத்தலைவியின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

- குடும்பத்தினர்

'அருளகம்',
கோவிற்கடவை,
துன்னாலை மத்தி,
கரவெட்டி.

[57214]



# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் செல்வத்துரை ஞானசேகரம்பிள்ளை**

ஆனந்த மழையில்
**1942 — 03 — 18**

ஆறாத்துயரில்
**1998 — 05 — 30**

ஆருயிர்த் தெய்வமே! அன்புத் தந்தையே!
அன்பின் திருவுருவமே அமைதியின் உறைவிடமே!
அரவணைக்க, ஆதரிக்க ஆயிரம் உறவுண்டு ஆனாலும்
அப்பா என்றழைக்க நீங்கள் இல்லையே!
மாதமொன்று ஆயிற்றே அன்பான அப்பாவே!
சகலதும் கனிந்திடும் உங்கள் கனிவான
மொழினிளிலே
கண்கலங்கி நாம் நிற்க கடவுள் ஏன் அழைத்தானோ!
பார் போற்ற வாழ்ந்தீர்கள் நேர் கொண்ட
பார்வையில் நிமிர்ந்து நின்றீர்கள்
உத்தமனாய்த் திகழ்ந்தீர்கள் உங்கள்
அன்பையும் அரவணைப்பையும் இனி
எங்கு நாம் காண்போம்?

தங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

என்றென்றும் உங்கள் நினைவில்;
கௌசலாதேவி (மனைவி)
தட்ஷாயினி (மகள்)

சரஸ்வதி பவனம்
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

(57212)


# பின்தங்கியகுடும்பங்களின்தேவைகள் குறித்து விபரம் திரட்டப்படுகிறது

திருநெல்வேலி ஜூன் 29

யாழ். சமூக அபிவிருத்தி மன்றம் யாழ். மாவட்டத்தில் பின் தங்கிய நிலையிலுள்ள கிராமங்களில் வசிக்கும் மக்களின் தேவைகள் பற்றிய விபரங்களைச் சேகரித்து வருகின்றது.

அரச சார்பற்ற வெளிநாட்டு உதவி வழங்கும் நிறுவனங்கள், உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் உதவிகளைப் பெற்று கஷ்ட நிலையிலுள்ள மக்களின் முக்கிய தேவைகளை நிறைவேற்ற மன்றம் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக அதன் நிர்வாக செயலாளர் தெரிவித்தார். இது விடயமாக அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம், ''யூனிசெவ்'' நிறுவனம் ஆகியன சில திட்டங்களுக்கு உதவுவதற்கு முன் வந்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ-135)

## தெல்லிப்பழை மகாஜனா நிறுவுனர் தினம்

கொழும்புத்துறை, ஜூன்.29

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நிறுவுனர் நினைவு தினமும், பரிசளிப்பு விழாவும் கடந்த புதன் கிழமை கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் க. நாகராசா தலைமையில் நடைபெற்றன.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வலயம் இரண்டின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி. இராசையா கலந்து சிறப்பித்தார்.

(ஐ-30)

## திருக்குறள் நூல் அன்பளிப்பு

சண்டிலிப்பாய், ஜூன் 29

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் 175 ஆவது ஆண்டு நிறைவு பெறுவதை முன்னிட்டு கல்லூரியில் கற்கும் சகல மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் திருக்குறள் நூல் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமையன்று கல்லூரியில் நடைபெற்ற 175 ஆவது ஆண்டு விழா தொடர்பான பொதுக் கூட்டத்தில் வைத்து இந்த நூல் மாணவர்களுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது.

கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்கத்தினர். இந்த திருக்குறள் நூல்களை அச்சிட்டு வழங்கியிருந்தனர். திருக்குறள் ஆங்கில மொழி பெயர்ப்பும் இதில் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ-135-185)

## தமிழ்விழா

குருநகர், ஜூன் 29

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி தமிழ்ப் பேரவை நடத்தும் தமிழ்விழா நாளை செவ்வாய்க்கிழமை மு. ப. 9.30 மணிக்கு வைத்தீஸ்வரா வித்தியாலயத்தின் விவேகானந்தமண்டபத்தில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் முன்னாள் அதிபர் சி. சிவசரவணபவன் [சிற்பி] கலந்து கொள்ளஉள்ளார்.

இந் நிகழ்வில் சிறப்பு நிகழ்ச்சியாக 'கற்புக்கனல்' நாட்டிய நாடகமும், 'வந்தாளே கூனி' எனும் நாடகமும் இடம் பெறவுள்ளன.

(ஐ-51-ரீ)

★ ★ ★

யாழ். வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை தமிழ்ச் சங்கம் நடத்தும் தமிழ்த்தின விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை [illegible] கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(ஐ-ரீ)

## சுன்னாகம் கடைகளில்
# பாவனைக்கு உதவாத பொருள்கள் மீட்பு!

சுன்னாகம், ஜூன் 29

சுன்னாகம் நகரக் கடைகள் மீது பொதுச் சுகாதாரப் பகுதியினர் திடீர்ப் பரிசோதனை நடத்தி, காலாவதியான பல பொருள்களையும் கைப்பற்றினர்.

கடந்த வெள்ளியன்று இச் சம்பவம் இடம்பெற்றது.

சிறுசிறு குழுக்களாக பல்வேறு கடைகளுக்குள்ளும் நுழைந்த சுகாதாரப்பரிசோதகர்கள், கடைகளில் இருந்த காலாவதியான பொருள்களையும், பழுதடைந்த பொருள்களையும் கைப்பற்றி பின்னர் அவற்றை அழித்தனர்.

பல கடைகளிலிருந்தும் எசென்ஸ் வகைகளே அதிகம் கைப்பற்றப்பட்டன. கன்டோஸ், பிஸ்கட் மற்றும் தானிய வகைகளும் கைப்பற்றி அழிக்கப்பட்டவற்றுள் அடங்குமெனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-27)

# அடிக்கடி மூடப்படும் மிருசுவில் பாடசாலை

மிருசுவில் வடக்கு அ. த. க. பாடசாலை அடிக்கடி மூடப்படுவதால் இப் பாடசாலை மாணவர்களின் கல்வி நிலை பாதிப்படைவதாகப் பெற்றோர்கள் கவலை தெரிவித்தனர்.

இப்பகுதியில் இடம் பெறும் சுற்றிவளைப்புகளின் போது படையினர் பாடசாலையில் முகாமிடுவதாலும், சில நாள்களில்பாதுகாப்பு அரணுக்கு வெளியே அதிபர், ஆசிரியர்கள் செல்ல அனுமதிக்கப்படாததாலும் பாடசாலை இயங்காமல் போவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)


# தெளிவாக ரி. வி. பார்க்க

இலங்கை—இந்திய ரி. வி. நிகழ்ச்சிகளைத்தெளிவாகப் பார்க்கவும் அன்ரனா பொருத்தவும், பழைய அன்ரனாக்களை. திருத்திப்பொருத்தவும் ரி.வி.,டெக், றேடியோ, மணிக்கூடுகளைப் பழுது பார்க்கவும், கொம்பியூட்டர் மூலம் ஒரே நாளில் கலர் படங்களை கழுவிப் பெற்றிடவும் உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத்தொடர்புகளுக்கும்

(உதிரிப்பாகங்களிற்காக பழுதடைந்த, நல்லநிலையில் உள்ள ரி, வி., டெக், கசற் றேடியோ, மணிக்கூடு என்பன வாங்கப்படும்.)

**வீனஸ் டெல்கா**

284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(நாகவிகாரை முன்பாக),
கிளை: பஸ் நிலையம் சாவகச்சேரி.
(மீன் சந்தை அருகில்)

(சி-3995)



**சண்டிலிப்பாய்**
# கல்வளைப் பிள்ளையார் கோவில்

வெகுதானிய வருஷ
## பிரம்மோற்சவ விஞ்ஞாபனம் - 1998

ஆனி மாதம் 15ஆம் நாள் (29 - 06 - 98)
திங்கட்கிழமை
காலை 7-00 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி முற்பகல் 10-00 மணிக்கு கொடியேற்றம் நடைபெறும்.

ஆனி மாதம் 24 ஆம் நாள் (08 - 07 - 98)
புதன்கிழமை
காலை 6-00 மணிக்கு அபிஷேகம் ஆரம்பம், தொடர்ந்து பூசை - 7-00 மணிக்கு ஸ்தம்ப பூசை 7-30 மணிக்கு வசந்த மண்டப பூசை. 9-00 மணிக்கு ரதத்தில் ஆரோகணித்து வீதி வலம் வருதல்.

ஆனி மாதம் 25ஆம் நாள் (09 - 07 - 98)
வியாழக்கிழமை
காலை 6-00 மணிக்கு தீர்த்தோற்சவ கிரியைகள் ஆரம்பம், அபிஷேகம் பூசையைத் தொடர்ந்து 7-00 மணிக்கு ஸ்தம்ப பூசை, 8-00 மணிக்கு வசந்த மண்டப பூசை, 9-00 மணிக்கு திவ்ய புஷ்கரணியில் தீர்த்தமாடுதல்.

மனோரஞ்ஜ சர்மா
(ஆலய பூசகர்)

விளம்பர அனபளிப்பு:
**டயமண்ட ரேடர்ஸ்**
டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

(57213)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன், 29

ஏழாலை மேற்கு அம்பலவாணேஸ்வரர் ஆலயரதோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். தீர்த்தோற்சவம் நாளைமறுதினம் புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

★ ★ ★

நீர்வேலி அருள்மிகு செல்வக்கதிர்காம சுவாமிகோயில் மகோற்சவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நடைபெறும்.

எதிர்வரும் 8 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ஐ-110)

★ ★ ★

கொக்குவில் நந்தாவில்கற்புலத்து அருள் மிகு மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10. 30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளது.

தேர்த்திருவிழா எதிர்வரும் 8 ஆம் திகதியும், மறுநாள் பூரணை தினம் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (ஐ-30)

★ ★ ★

அராலி - மலயாளம் அருள்மிகு ஸ்ரீ ஐயனார் கோயிலின் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று திங்கட்கிழமை காலை ஆரம்பமாகி 9 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை விசேடசங்காபிஷேகத்துடன் பூசையை அடுத்து சுவாமி வீதி வலம் வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார். (ஐ-30)

★ ★ ★

கொடிகாமம் கச்சாய் வீதி சம்பேதுறு வானவர் தேவாலய வருடாந்த உற்சவ திருநாள் திருப்பலி இன்றுகாலை நடைபெறும்.

திருப்பலியை அடுத்து புனிதரின் திருச்சுருவப் பவனி இடம் பெறும். (இ-15)

★ ★ ★

நல்லூர் வடக்கு இராஜராஜேஸ்வரி தேவஸ்தானத்தின் புனருத்தாரண மகா கும்பாபிஷேக தினம் இன்று திங்கட்கிழமையாகும். இதனையொட்டி இன்று காலை அபிஷேகமும், மாலை அலங்கார உற்சவமும் நடைபெறவுள்ளன. (ஐ-9)

★ ★ ★

கோப்பாய் அருள்மிகு ஸ்ரீ வெள்ளெருவைப் பிள்ளையார் கோயில் வருடாந்த மகோற்சவம் நாளை 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பகல் துவஜாரோகணத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்துபத்துத்தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 8 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் துவஜா அவரோகண நவசந்தி விமர்சனமும் நடைபெறும். (ஐ-15-ரீ)

★ ★ ★

சாவகச்சேரி வடக்கு மண்டுவில் கண்ணகை அம்மன் (சோலை அம்மன்) தேவஸ்தான மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

ஜூலை எட்டாம் திகதி தேர் உற்சவமும் ஒன்பதாம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ஐ-117)

★ ★ ★

ஆனி உத்தர தினத்தை முன்னிட்டு எதிர்வரும் முதலாம் திகதி புதன்கிழமை குடாநாட்டில் உள்ள பல ஆலயங்களில் நடேசரபிஷகமும், விசேட பூசை வழிபாடுகளும் நடைபெறவுள்ளன. (ஐ-12, 109, 135-30)

★ ★ ★

அளவெட்டி பெருமாக்கடவைப் பிள்ளையார் கோயில் மகோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 3ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ஐ-8)

★ ★ ★

தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

தினமும் மாலை 4-5 மணி வரை 'பெரியபுராணம்' என்ற தலைப்பில் ஆறு. திருமுருகன் சொற்பொழிவாற்றுவார்.

எதிர்வரும் 8ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநான் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ஐ-8)

## பண்டத்தரிப்பில் கசிப்பு

சண்டிலிப்பாய் ஜூன் 29

பண்டத்தரிப்பு அம்மன் வீதியிலுள்ள வீடு ஒன்றில் சட்டவிரோத கசிப்பு உற்பத்திக்குபயன்படுத்தப்பட்ட உபகரணங்களும், பரல்களும் பாதுகாப்புக் படையினரால் கைப்பற்றப்பட்டன.

இந்த சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்களும் படையினரால் பண்டத்தரிப்பிலுள்ள முகாமுக்கு கூட்டி வரப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டதாக தெரிய வருகின்றது. (இ-135)

# போக்குவரத்தில் உள்ள சிரமங்களால் நயினாதீவில் பக்தர்கள் குறைவு

நெடுந்தீவு, ஜூன் 29

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் கொடியேற்றத் திருவிழாவன்று பெரும் எண்ணிக்கையான யாத்திரிகர்கள் நயினாதீவுக்கு வந்து சேருவார்கள் என எதிர்பார்க்கப்பட்டபோதும் இம்முறை உற்சவத்தின் முதல்நாளன்று ஆயிரத்து ஐந்நூறுக்கும் குறைவானவர்களே கலந்து கொண்டனர்.

தீவுப்பகுதிகளைச் சேர்ந்தவர்களே பெரும் எண்ணிக்கையில் கலந்து கொண்டனர். ஏற்கனவே தெரிவித்தபடி யாழ். நகரில் இருந்து நயினாதீவு வரும் யாத்திரிகர்களுக்கு உரிய போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை எனவும் அதனால் அங்கு வர முடியாத நிலையில் பெரும் எண்ணிக்கையான யாத்திரிகர்கள் பஸ் நிலையத்தில் இருந்து தமது வீடுகளுக்குத் திரும்பிவிட்டதாகவும் யாழ். நகரில் இருந்து வந்த பயணிகள் தெரிவித்தனர்.

சோதனைகளும் இம்முறை மிக இறுக்கமாகவே காணப்பட்டன. யாழ். நகரில் இருந்து பாதுகாப்புடன் வரும் பஸ்கள் இடையில் சோதனையிடப்படமாட்டாதென முன்னர் கூறப்பட்டபோதும் நடைமுறையில் வழமையிலும் பார்க்க கடினமாகவே இருக்கக் காணப்பட்டது.

அனைத்துச் சோதனைச் சாவடிகளிலும் எல்லோரும் பஸ் வண்டியில் இருந்து இறக்கப்பட்ட பின்னரே பயணத்தைத் தொடர அனுமதிக்கப்பட்டனர்.

படகுச் சேவையும் காலை முதல் நண்பகல் வரை ஓரளவு சீராக நடைபெற்ற போதிலும் பிற்பகலில் 3 மணிக்குப் பின்னரே நயினாதீவு குறிகாட்டுவான் துறைக்குச் சென்று திரும்புவதால் பிற்பகலில் நயினாதீவு சென்று திரும்பும் பயணிகள் பஸ் கிடைக்காது மீண்டும் நயினாதீவுக்கு திரும்பவேண்டிய நிலை முதல்நாளே ஏற்பட்டது. அன்றைய தினம் இரண்டு பஸ் வண்டிகள் குறிகாட்டுவானில் இருந்து பயணிகளின்றி யாழ். நகர் திரும்பின. படகு ஊழியர்கள் மிகக் கூடுதலான பயணிகளைத் தமது படகில் ஏற்ற வேண்டும் என்ற முனைப்புடன் செயற்படுவதாலேயே பிரயாணிகள் பஸ் வண்டியை தவறவிட்டு என்ன செய்வதென்று தெரியாத நிலையில் மீண்டும் நயினாதீவுக்குச் செல்ல வேண்டியேற்பட்டது.

25ஆம் திகதி வியாழக்கிழமை பி. ப. 3-30 மணிக்குக் குறிகாட்டுவானில் இருந்து யாழ். நகர் வந்த பஸ் வண்டியில் சுமார் 167-க்கும் அதிகமான பயணிகள் மிகுந்த நெரிசலுடன் பயணம் செய்தனர்.

ஆலயத்தைப் பொறுத்தவரை உற்சவம் வழமைபோல் சிறப்பாகவும் யாத்திரிகர்கள் அங்கு எவ்வித சிரமங்களும் இன்றித் தங்கி அம்பாளின் அருளைப் பெற்றுச் செல்லக் கூடியதாகவும் பணிகள் நடைபெறுகின்றன. நயினாதீவு நாகபூஷணி அமுதசுரபி அன்னதானச்சபை இம்முறை யாத்திரிகர்களுககு பகல் இரவு இரு தடவைகள் அன்னதானம் வழங்க ஒழுங்குகள் செய்துள்ளது. நண்பகல் முதல் இரவு 8 மணி வரை அதன் சேவை யாத்திரிகர்களுக்குக் கிடைக்கும். உணவு தங்குமிட வசதிகள் கிடைத்த போதிலும் பிரயாணத்தில் உள்ள சிக்கல்கள் தீர்க்கப்படாவிடில் முக்கியமான உற்சவங்களில் கூட பெருந்திரளான அடியார்கள் கலந்து கொள்ள முடியாமல் போய் விடலாம். எனவே இறை வழிபாட்டிற்குச் செல்லும் அடியார்களுக்கு இன்னல்களும் இடையூறுகளும் ஏற்படாதவாறு சம்பந்தப்பட்டவர்கள் செயற்பட வேண்டும். (ஐ-103)

## ஆரம்பப் பாடசாலை திறப்பு

வலிதென்மேற்கு ஜூன் 29

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 175 ஆம் ஆண்டு நிறைவையொட்டி இரண்டு மாடிகளைக் கொண்ட ஆரம்பப் பாடசாலை திறந்து வைக்கப்பட்டது. கல்லூரி வளாகத்தில் மகோகனி மரங்களும் நடப்பட்டன.

இவ்விழாவில் அமெரிக்க ஜேர்சி பல்கலைக்கழக பேராசிரியர் ஜோன் வோல்ரர், கல்லூரி முதல்வர் ஜி. இராஜநாயகம், பேராயர் எஸ். ஜெபநேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-185-135)

## ஆசிரியர்களுக்கான இடர்கால கொடுப்பனவு ஜூலை சம்பளத்துடன்

கொழும்பு, ஜூன் 29

வடக்கு - கிழக்குப் பகுதியில் கடமையாற்றி வருகின்ற ஆசிரியர்களுக்கு கடந்த வருடத்துக்கான நான்கு மாத இடர்காலக் கொடுப்பனவு ஜூலை மாதச் சம்பளத்துடன் சேர்த்து வழங்கப்பட உள்ளது.

வடக்கு — கிழக்குப் பகுதிகளில் கடமையாற்றி வருகின்ற ஆசிரியர்களுக்குகடந்த வருடத்துக்கான நான்குமாத இடர் காலக் கொடுப்பனவு நீண்ட நாள்களாக வழங்கப்படாமல் இருந்தது.

தற்போது இந்தக் காலப் பகுதிக்கான கொடுப்பனவை வழங்குவதற்காக ஆறு கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே ஜூலை மாதச் சம்பளத்துடன் சேர்த்து வழங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு கல்விப்பணிப்பாளர்களை வடக்கு — கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சு. டிவகலாலா கேட்டுள்ளார்.

அதே சமயம் அரசு வெளியிட்டுள்ள புதிய சுற்றறிக்கை ஒன்றில் வடக்கு — கிழக்குப் பகுதிகளில் கடமையாற்றும் ஊழியர்களுக்கான இடர் காலக் கொடுப்பனவை 25 சதவீதத்திலிருந்து 12.50 சதவீதமாகக் குறைப்பதாக அறிவித்துள்ளது. (இ-10-9)

## பருத்தித்துறை துறைமுகம் திருத்துவதற்கு நிதி உதவி வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 29

பருத்தித்துறை துறைமுகத்தை திருத்த நிதி உதவி வழங்க வேண்டும் என்று பருத்தித்துறை பிரிகேட் தளபதி கேணல் சரத் கருணரத்தின ஈ.பி.டி.பி. அமைப்பினரிடம் கோரியுள்ளார்.

ஈ.பி.டி.பி. யாழ்.மாவட்ட அமைப்பாளர் வி. கே. ஜெகன் தலைமையிலான தூதுக்குழு ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்துப் பேச்சு நடத்திய சமயமே அவர் இக்கோரிக்கையை விடுத்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படும் நிதியில் இருந்து இந்த திருத்த வேலைக்கு நிதி உதவி வழங்குமாறே அவர் கோரியுள்ளார்.

வடமராட்சிப் பகுதியில் உள்ள பாடசாலைகள், விளையாட்டுக்கழகங்கள், சனசமூக நிலையங்கள் ஆகியவற்றின் அபிவிருத்திக்கு கூடுதல் நிதி வழங்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

''வடமராட்சிப் பகுதிக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது'' என்று ஜெகன் பதில் அளிக்கையில் தெரிவித்தார். (இ-3)

## மாவிட்டபுரம் கோயிலில் இன்று முதல் விசேட பூசை

யாழ்ப்பாணம், ஜூன் 29

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் மஹோற்சவ தினங்களுக்குப் பதிலாக இன்று திங்கட்கிழமை முதல் விசேட பூசை வழிபாடுகள் மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக மாவை ஆதீன கர்த்தா சு. து. சண்முகநாதக் குருக்கள் தெரிவித்துள்ளார்.

இன்று முதல் தினமும் காலை 8 மணி முதல் பிற்பகல் 2-30 மணிவரை விசேட அபிஷேக ஆராதனைகள், மகேஸ்வர பூசை என்பன நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆடித் திருக்கார்த்திகை தினத்தை முன்னிட்டு ஷண்முக அர்ச்சனை, மாவிளக்கேற்றுதல் முதலியனவும், மறுநாள் தேர்த்திருவிழாவன்று ஷண்முக அர்ச்சனை, திருமுறை, திருப்புகழோதுதல் முதலியனவும் நடைபெறும்.

எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்ததினமான ஆடிஅமாவாசையன்று கீரிமலைத் தீர்த்தத்தில் ஸ்நான சங்கல்பம், பிதிர் தர்ப்பணம் முதலியவற்றை ஆற்றுவதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை பாதுகாப்பு அரண் மூலமாக மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்கான பிரயாண ஏற்பாடுகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-8)

## ஜனாதிபதியின் பிறந்தநாள்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் 53 ஆவது பிறந்த தினம் இன்றாகும். (இ-10-9

## காயம்

தறித்து வீழ்த்திய புளிய மரக் கொப்பில் சிக்கி ஒருவர் படுகாயமடைந்தார்.

அளவெட்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் கே.யோகராசா (வயது 26) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர், சுய நினைவு இழந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரி அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

# இயற்கைக்கடன் கழிக்க இடமின்றி சாரதிகள் அவதி

யாழ்ப்பாணம், ஜூன் 29

பருத்தித்துறையில் கப்பலில் இருந்து இறக்கப்படும் பொருள்களை ஏற்றிச் செல்வதற்காகக் காத்திருக்கும் லொறிச்சாரதிகள் இயற்கைக்கடன் கழிப்பதற்கு வசதியற்ற நிலையில் பெரும் அவஸ்தைப்பட வேண்டியிருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

பொருள்களை களஞ்சியங்களுக்கும் கடைகளுக்கும் ஏற்றிச் செல்வதற்காக மணிக்கணக்கில் காத்திருக்கும் லொறிச் சாரதிகளுக்கே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

கப்பலில் வரும் பொருள்களை எடுத்துச் செல்வதற்கென யாழ். செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட லொறிகளே பயன்படுத்தப்படுகின்றன.

150-க்கும் மேற்பட்ட லொறிகள் பதிவு செய்யப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

பதிவுமுறைக்கமைய செயலகத்தில் இருந்து, அணிகளாகச்செல்லும் இந்த லொறிகள் பருத்தித்துறையில் மூன்று, நான்கு நாள்கள் தரித்து நின்றே ஒழுங்கு முறைப்படி பொருள்களை ஏற்றிச் செல்வது வழக்கம்.

லொறிகள் தரித்து நிற்பதற்கென பருத்தித்துறை ஓராம் கட்டைச்சந்திப் பகுதியில் லொறிகள் தரிப்பிடம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

நாட்கணக்காக அங்கு தங்கி நிற்கும் லொறிகளின் சாரதிகள் இயற்கைக்கடன் கழிக்க வசதி செய்யப்படவில்லை.

இந்த நிலையை தீர்க்க ஆவன செய்து உதவுமாறு, யாழ். மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச்சங்க வடமராட்சிக் கிளையுடன் பலதடவை தொடர்பு கொண்டும் இது வரை காலமும் எந்தவித தகுந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என சாரதிகள் தெரிவித்தனர். (ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 ஆயிரம் பேர் கப்பலில் வருவதற்கு காத்திருப்பு

கொழும்பு, ஜூன் 29

வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய இடங்களில் சுமார் 15 ஆயிரம் பயணிகள் வடபகுதிக்குச் செல்வதற்கான கப்பல் சேவையை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள் என திருகோணமலை பிரதேச செயலாளர் வேலும் மயிலும் தெரிவித்தார்.

திருகோணமலை, மன்னார் ஆகிய இடங்களில் இருந்து வடபகுதிக்கான பயணிகள் கப்பல் சேவை நீண்டகாலமாகவே தடைப்பட்டுள்ளது.

இதனால் வடபகுதிக்குச் செல்வதற்காக பதிவு செய்த பின்னர் சுமார் 15 ஆயிரம் பயணிகள் காத்திருக்கின்றார்கள்.

ஐயாயிரம்பேர் திருகோணமலையிலும், இரண்டாயிரம் பேர் வவுனியாவிலும், எண்ணாயிரம் பேர் மன்னாரிலும் வடபகுதிக்குச் செல்வதற்காகக் காத்துநிற்கின்றனர். மன்னாரில் பதிந்துள்ள எண்ணாயிரம் பேரில் அதிகமானோர் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் இருந்து வடபகுதிக்குச் செல்வதற்காக வந்த அகதிகளாவர் என்றும் அவர் தெரிவித்தார். (இ-10-9)


**கடை வாடகைக்கு**

காங்கேசன்துறை வீதியில் சிவன் கோவிலுக்கு முன்பாக கடை வாடகைக்கு விடப்படும்.

4 மணிக்கு தொடர்பு கொள்ளவும்.

இல. 54 (புதிய இல.160),
மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(57216)


## உயிர் நுட்பப் பிரிவு ஆரம்பம்

வடமராட்சி, ஜூன் 29

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் உயிர் நுட்பப் பிரிவு நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இப்பிரிவை மருத்துவபீடத்தின் முன்னாள் தலைவர் பேராசிரியர் பாலசுப்பிரமணியம் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இதற்கு முன்னதாக பேராசிரியர் பாலசுப்பிரமணியத்துக்கு பிரிவுபசார வைபவம் மருத்துவ பீடத்தில் இடம் பெற்றது. (இ-173)


வடமராட்சியில்

இலகுவான தமிழ் விளக்கத்துடன்
ஆங்கிலம் கற்பிக்கும் தனித்துவமான நிறுவனம்

**OXFORD ENGLISH ACADEMY**

ஆலடிப்பிள்ளையார் வீதி, சுப்பர்மடம்
பருத்தித்துறை.

3ஆவது பிரிவு ஆரம்பம்: 05-07-98 (4p.m)

BY: B. JOTHY (B. Com Hons)

(சொற்ப அனுமதிகளே உண்டு அனுமதிக்கு முந்துங்கள்)

★ A/L எடுத்தவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் வேலை செய்வோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(57158)



**ஸ்ரீ வல்லிபுரா போட்டோ**

**வர்ண புகைப்படச் சுருள் பிரதியாக்கல் சேவை**

யாழ். மாவட்ட மக்களின் கவனத்திற்கு!

உங்கள் வாழ்நாளில் மறக்கமுடியாத நிகழ்வுகளைக் காலங்காலமாக கலர்ப்படப் பிரதியாக்கி வைத்துப் பார்க்க அவசரப்படாமல் தரமானதாகப் பிரதியாக்கம் செய்யுங்கள்.

இங்கிருந்து எடுத்துச்சென்று கழுவி வருவதால் காலதாமதம் ஏற்பட்டாலும் நாங்கள் உங்களுக்கு இலங்கையிலேயே முதல்தர நிலையிலுள்ள LAB ஆன PHOTO CHROME LABORATORIES (Pvt)Ltd. இல் இற்றைக்கு 5 வருட காலமாக மிகத் தரமான கலர்ப்படங்களைப் பிரதியாக்கம் செய்து வழங்கி வருகின்றோம்.

எனவே 25 ஆண்டுகளுக்கு மேல் அனுபவம் வாய்ந்த "PHOTO CHROME" இல் வர்ணப்படங்களைப் பிரதியாக்கம் செய்திட நாடுங்கள்:

**ஸ்ரீ வல்லிபுரா போட்டோ**
புலோலி தெற்கு, புலோலி,
பருத்தித்துறை.

கீழ்க்காணும் எமது முகவர்கள் ஊடாகவும் படச்சுருள்களை ஒப்படைக்கலாம்:

★ குவிக் போட்டோ (இருபா), கோண்டாவில்.
★ ரிஷி போட்டோ (மாறன்), யாழ். நகர்.
★ யாழ். மாவட்ட புகைப்படப் பிடிப்பாளர் சங்கம், கந்தர்மடம்.
★ பாபு றெக்கோடிங் ஸ்பொட் (ஆனந்தன்), சாவகச்சேரி
★ தர்மராஜ் (ஜப்பான்), இருபாலைச் சந்தி.

20-06-98 வரை எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட படச்சுருள்கள் யாவும் பிரதியாக்கம் செய்து வந்துவிட்டன.

- சந்திரன்
(ஸ்ரீ வல்லிபுரா போட்டோ)

(57218)


# இந்து ஆலயங்கள் மீதான தாக்குதலை கண்டித்து பாரிஸ் மாநாடு தீர்மானம்

பாரிஸ், ஜூன் 29

இந்து ஆலயங்கள் மீது நடாத்தப்படுகின்ற குண்டுத் தாக்குதல்களை நிறுத்துமாறும்—

பிரசித்திபெற்ற சிவத்தலங்களாக விளங்கும் ஐந்து ஈஸ்வரங்களைப் பாதுகாக்கப் படவேண்டிய புனித பிரதேசமாகப் பிரகடனப்படுத்த வேண்டுமெனவும் —

யுனெஸ்கோவிடம் கோரும் தீர்மானம் ஒன்று நேற்று முன்தினம் பாரிஸில் நடைபெற்ற இந்து மாநாட்டில் எடுக்கப்பட்டது.

பிரான்ஸின் தலைநகரான பாரிஸில் உள்ள ஐ.நா. கல்வி விஞ்ஞான நிறுவனமான யுனெஸ்கோ மண்டபத்தில் முதலாவது இந்து மாநாடு நேற்று முன்தினம் நடைபெற்றது.

நேபாளத் தூதுவர் இந்திரா பகதூர் சிங் மங்கள விளக்கேற்றி இந்த மாநாட்டை ஆரம்பித்து வைத்தார்.

அதனைத்தொடர்ந்து இந்தியத் தூதுவரின் செய்தியை அவரது முதல் செயலாளர் வாசித்தார். மாநாட்டு நினைவு மலரின் முதல் பிரதியையும் அவரே பெற்றுக்கொண்டார். இரண்டாவது பிரதியை விஸ்வஹிந்த் பரிஷத் அமைப்பின் ஐரோப்பிய ஒருங்கிணைப்பாளர் பெற்றுக்கொண்டார். (இ-9)

## பல்கலைக்கழக மாணவர்கள் இடை நிறுத்தம்

கொழும்பு, ஜூன் 29

கொழும்பு பல்கலைக்கழகத்தில் மூன்று மாணவர்கள் வகுப்புகளில் இருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளனர்.

தற்போது நடைபெற்று வரும் பரீட்சைகளை குழப்ப முயன்றார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை முதல் இடை நிறுத்தப்பட்டனர். (இ-10-9)

### சிவபாலன்…

(முதலாம் பக்கத் தொடர்)

விடுதலைக்கூட்டணியால் நியமிக்கப்பட்டுள்ள புதிய உறுப்பினர்களும் இன்றைய கூட்டத்தில் பங்குபற்றுவர். (இ-3)

### தேர்தல்…

(முதலாம் பக்கத் தொடர்)

நேரம் வந்துள்ளது.

மாகாண சபைத் தேர்தலும், ஜனாதிபதித் தேர்தலும் அரசமைப்பின்படி நடைபெறவேண்டும். அதே சமயம் நாட்டின் பாதுகாப்பு நிலைமையையும், யுத்த நிலையையும் கருத்தில் கொண்டே இவற்றைச் செயற்படுத்த வேண்டும்.

"அரசாங்கம் எதிர்க்கட்சியுடன் இந்த விடயத்தில் இணக்கமான கொள்கையைக் கொண்டிருக்க வேண்டும்.

கிளிநொச்சிக்கும், வவுனியாவுக்குமிடையிலான பாதையை முழுமையாகப் பிடிப்பதற்கு இறுதி இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன—

வெகுவிரைவில் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டு வடக்குக்கும் தெற்கிற்குமிடையே இணைப்பு ஏற்படுத்தப்படும்.

விடுதலைப் புலிகளின் பிடியில் இருந்த அனேகமான பகுதிகளை பாதுகாப்புப் படையினர் மீட்டுள்ளனர். மாங்குளத்துக்கும் கிளிநொச்சிக்கும் இடையிலுள்ள ஒரு சிறு பகுதியே தற்சமயம் விடுதலைப் புலிகளின் கையில் உள்ளது, விரைவில் அவற்றையும் படையினர் கைப்பற்றி விடுவார்கள். — இப்படி அனுருத்த ரத்வத்த தெரிவித்தார்.

பாதுகாப்பு நிலைவரம் உட்பட பல்வேறு விடயங்களைக் கருத்தில் கொண்டே மாகாண சபைத்தேர்தல்களை ஒத்திவைப்பதற்கு அரசு விரும்பியது என்று தெரிவிக்கப்படுகிறது.

எனினும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணக்கம் ஏற்படத் தவறியதை அடுத்து மாகாண சபைத் தேர்தல்களை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடத்துவதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

தேர்தல் கடமைகளுக்கு பொலீஸாரை ஈடுபடுத்துவதில் உள்ள சிரமங்கள் [illegible] [illegible] அறிக்கை சமர்ப்பித்திருந்தார். (இ-3-9)

## அனுராவுடன் சந்திப்பு சந்திரிகா மறுக்கிறார்

கொழும்பு, ஜூன் 29

கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரவலாக பேசப்பட்டு வந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும், அவரது சகோதரரான அனுரா பண்டாரநாயக்காவுக்கும் இடையேயான சந்திப்பு இடம்பெறவில்லை.

கடந்த வெள்ளிக்கிழமை நடந்த விசேட அமைச்சரவைக் கூட்டத்துக்கு தலைமை வகித்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இதனைத் தெரிவித்தார்.

'எனது சகோதரன் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இணைந்து பிரதமர் பதவிக்கு நியமிக்கப்படவிருப்பதாக பத்திரிகைகளில் ஊகம் தெரிவிக்கப்பட்டிருந்தது. அந்த ஊகத்தில் எந்த வித உண்மையும் இல்லை, அவருடன் வருடக்கணக்கில் நான் கதைக்கவில்லை' என்று சந்திரிகா தெரிவித்துள்ளார்.

இது விடயமாக அனுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளதாவது:

நான் ஐ. தே. கவில் இருந்து விலகி பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் சேரப்போவதாக ஒருபோதும் தெரிவிக்கவில்லை. பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் இரு அமைச்சர்கள்தான் இந்த விவகாரத்தைப் பரப்பினார்கள். இந்த விடயத்தில் எந்த வித உண்மையும் இல்லை.

ஜனாதிபதி மீது தனிப்பட்ட முறையில் எனக்கு கோபம் இல்லை. அரசியல் தான் இருவரையும் பிரித்தது.

இப்படி அனுரா கூறினார். (இ-3)

## இரத்ததானம் செய்ய முன்வராத எம்.பிக்கள்

கொழும்பு, ஜூன் 29

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட இரத்ததான வைபவத்துக்கு அரசாங்க மற்றும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் எவரும் செல்லவில்லை என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பு தேசிய மருத்துவமனையில் இரத்தத்துக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் இந்த இரத்தகான வைபவம் நேற்று முன்தினம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

படையினர் பற்றிக் கொக்கரிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட இந்த இரத்ததான வைபவத்தில்கலந்து கொள்ளாதது வேதனைக்குரியது என அரசாங்க மருத்துவ சங்கத்தின் மூத்த உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (இ-9-10)

## வேட்பாளரைத் தெரிவதில் அரசியல் கட்சிகள் தீவிரம்

கொழும்பு, ஜூன் 29

மாகாண சபைத் தேர்தலை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடத்துவதென அரசு அறிவித்ததையடுத்து அரசியல் கட்சிகள் தமது வேட்பாளர்களைத் தெரிவு செய்வதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளன என செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்காக மலையக மக்கள் முன்னணி இந்திய வம்சாவளி மக்கள் பேரணியில் இணைவதற்கு ஆலோசித்து வருவதாகவும்—

மத்திய, ஊவா, மேல் மாகாண சபைகளில் இந்திய வம்சாவளி மக்கள் பேரணிக்கு அதிக ஆதரவு கிடைக்கும் எனவும் —

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி இந்திய வம்சாவளி மக்கள் பேரணிக்கு ஆதரவு தெரிவிக்கமாட்டாது எனவும்— செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-10-9)

### பயணிகள்…

(முதலாம் பக்கத்தொடர்)

பலில் 350 பயணிகள் ஒரு தடவையில் பயணம் செய்ய முடியும்.

யாழ்ப்பாணத்தில் இருந்து பயணிகள் அழைத்துச் செல்லப்படுவர்.

திருமலையில் இருந்து அகதிகளே அழைத்து வரப்படுவர்.

கப்பல் கட்டணமாக ஆயிரத்து 500 ரூபா அறவிடப்படவிருக்கிறது.

இத்தொகை அதிகமானது என சில வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-3)

### பாரிய…

(முதலாம் பக்கத் தொடர்)

கொழும்புத் துறைமுகத்தில் நடை பெறுவதாகவும்—

இந்த ஜெனரேட்டர்கள் வந்து சேர்ந்த பின்னர் உடனடியாக இணைப்பு வேலைகள் ஆரம்பிக்கும் என்றும்— தெரிவிக்கப்பட்டது.

பெரும்பாலும் அடுத்த மாத இறுதிக்குள் இந்த மின் நிலையம் இயங்க ஆரம்பிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## கடற்பொலீஸ் பிரிவிடம் பாதுகாப்பு

கொழும்பு ஜூன் 29

இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலுமுள்ள முக்கிய துறைமுகங்களின் பாதுகாப்புப் பணிகள் கடற்பொலீஸ் பிரிவிடம் விரைவில் கையளிக்கப்பட உள்ளன.

இதுவரை அந்தந்தப் பகுதி பொலீஸ் அத்தியட்சகரின் கீழேயே துறைமுகப் பொலீஸ் பிரிவுகள் சேவையாற்றின. (இ-10-9)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறை வேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29-06-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org